161

161

மீனாக்ஷி

தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

நா. கனகராஜ ஐயர்
இயற்றியது

19 OCT 1945
MADRAS

494.81186

13

வி. சூ. சுவாமிநாதன்
புத்தக வியாபாரி
மதராஸ் :: மதுரை :: திருநெல்வேலி

பதிப்புரிமை] [விலை 0-6-6

முன்னுரை

நம் தமிழ் நாட்டில் அநேக தமிழ் வாசக புத்தகங்கள் வெளி வந்துள்ளன. ஆயினும் கற்பிக்கவேண்டிய முறைப்படி, இது வரை வெளிவந்துள்ள புத்தகங்களில் இல்லாத சில புதிய பாடங்களுடன், மீனாக்ஷி தமிழ் வாசகம் என்னும் வாசக வரிசையை வெளியிடத் துணிந்தேன். அவற்றுள் மூன்று புத்தகங்கள் வெளிவந்து, துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டு, பல பாடசாலைகளிலும் உபயோகப் படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது இந்நான்காவது புத்தகத்தையும் பாடசாலை அதிகாரிகள் உபயோகித்து, எனக்கு மென்மேலும் ஊக்கமளிப்பார்கள் என்ற துணிவுடன் வெளியிடுகிறேன். இப்புத்தகத்துள் நமது தேசம், காற்று, காற்றின் சக்தி, ஆறும் ஏரியும், சாரணச் சிறுவர், படம் பழக்கம், கடிதம் படித்தல் முதலிய பாடங்கள், புதிதாய்ச் சேர்க்கப்பட்டுள்ளன.

இப் புத்தகத்தைப் பிரசுரிக்குமாறு எனக்கு அனுமதி தந்த இதன் ஆசிரியர் நா. கனகராஜ ஐயர் அவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளேன். மற்றும் இப் புத்தகம் வெளிவருவதற்கு மிகவும் உதவிபுரிந்த கனவான்களுக்கும், இதனைப் பாடப் புத்தகமாக உபயோகிக்கும் பாடசாலை அதிகாரிகளுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். இவ்வாசக வரிசைக்குத் துடர்ச்சியாகத் தமிழ் நாட்டு வாசகம் என்று லோயர் செக்கண்டரி வகுப்புக்கு உரியன பிரசுரித்திருக்கின்றேன். அதையும் ஆதரிக்குமாறு வேண்டுகிறேன்.

வி. சூ. சுவாமிநாதன்.

மீனாக்ஷி

தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

புதுக்கோட்டை மஹாராஜா கல்லூரித் தமிழ் பண்டிதர்

வித்வான், நா. கனகராஜ ஐயரவர்கள்

எழுதியது

18 OCT 1945
MADRAS
973

பிரசுரகர்த்தர்:

வி. சூ. சுவாமிநாதன்

மதராஸ்—மதுரை — திருநெல்வேலி

பதிப்புரிமை]

[விலை 0-6-6

கடவுள் துதி

(முத்திநெறி அறியாத என்ற சந்தம்)

மனம் உருக்கும் பாடல்களை வாயாறப் பாடிநின்றே
தினம் உனது சேவடியைச் சிந்திக்கும் செல்வமுளோம்.
கனம் உதவும் கல்வியினைக் கற்கவரும் கருத்துடைய
இனம் எனவே எண்ணிஎமை எம்பெருமான்! காத்தருளே.

கைப்பொருளின் மெய்ப்பொருளாம் கல்விஎனக் கருதுவம்யாம்
முப்பொழுதும் உனை வணங்கி முயற்சியினுல் உயர்ச்சிபெற
எப்பொழுதும் விழைகின்ருேம் இறையவனே எம்பெருமான்
இப்பொழுது நின்னருளாம் இன்பமிகத் தந்தருளே.

நற்குணமும் கல்வியைப் போல் நாடுதற்குச் சிறந்ததென
சிற்குணனேபெரியோரால் சிறியேம் யாம்தெரிந்துமுளோம்.
கற்பனைகட் கடங்காத கடவுள் உனைக் கண்டடைவோம்.
அற்பகுணம் அகற்றி எமை ஆளாக்கி ஆண்டருளே.

உயர்வுடனே சிறப்பினையும் உழைப்பதனுல் அடைந்திடலாம்
அயர் வறுநல் வாழ்வினை உன் அருட்பெருக்கால் அடைந்திடலாம்
பெயர் பலவாய் உருவிலனுய்ப் பிறங்கியஎம் பெருமானே!
துயர் தவிர்க்கும் உமதடியைத் துணைகொண்டோம் வந்தருளே.

அரச வாழ்த்து

(மந்திரமாவது நீறு என்ற சந்தம்)

மன்னவர் மன்னர் வாழ்க மாநில முழுதாள்வோன் வாழ்க
மன்னவர் ஆரும் ஜார்ஜ் மாநிலத்தினிலே வாழ்க
பன்னலம் உதவுவோன் வாழ்க பரவிய புகழுளோன் வாழ்க
பன்னலப் பேற்ருெடும் வாழ்க பரமன் அருளிஞல் வாழ்க.

இங்கிலாந் தாள்பவன் வாழ்க இந்திய மன்னன் வாழ்க
எங்கள் இறையவன் வாழ்க இன்ப நலத்தவன் வாழ்க
மங்கள வாழ்வினன் வாழ்க மதியினில் உயர்ந்தவன் வாழ்க
சங்கடம் தவிர்ப்பவன் வாழ்க ஜார்ஜெனும் மன்னன் வாழ்க.

கல்வியைத் தருபவன் வாழ்க காருண்ய மன்னன் வாழ்க
செல்வமும் செழுத்திடச் செய்யும் சிறப்புள்ள மகிபாலன் வாழ்க
அல்வழிச் செல்வோரை அடக்கும் அறநெறி உள்ளவன் வாழ்க
பல்வகையாலும் நம்நாட்டைப் பாலிக்கும் மன்னன் வாழ்க.

மிக்கநடு நிலையாளன் மேன்மையுடன் என்றும் வாழ்க
தக்கோர்கள்சொன்னசொல் கேட்கும் தகைமையுடையவன் வாழ்க
எக்காலும் இன்புற்று வாழ்க எங்கணும் புகழ்பெற்று வாழ்க
அக்கால மன்னர்போல் என்றும் அன்பிஞல் ஆள்பவன் வாழ்க.

மன்னவர் ஆரும் ஜார்ஜ் வாழ்க மருவிய சுற்றமும் வாழ்க
இங்கிதந் தேர்ந்தவன் வாழ்க இந்திய மன்னவன் வாழ்க
மிக்கநடு நிலையாளன் மேன்மையுடன் என்றும் வாழ்க
மைந்துடையானெழில் மன்னன் வாழ்க பல்லாண்டு பல்லாண்டே.

923

ஆறும் ஜார்ஜ் சக்கரவர்த்தியும் எலிசபெத்து மகாராணியும்.

பொருள் அடக்கம்

எண்	விஷயம்	பக்கம்
1.	எங்கும் உள்ளவர்	1
2.	நான்கு தலைமுறை	3
3.	துஷ்ட ஜந்துக்கள்	7
4.	இடறுகல்	9
5.	புலி	12
6.	வீரத்தாதி	15
7.	நமது தேசம்	17
8.	உண்மையின் பெருமை (கும்மி)	20
9.	காற்று	22
10.	காற்றின் சக்தி	25
11.	பேராசை பெரு நஷ்டம்	29
12.	தாஜ்மஹால்	32
13.	புத்தியும் வித்தையும்	35
14.	சர்க்கரை	38
15.	தந்தையைக் காத்த சிறுமி	42
16.	சுகாதார விதிகள்	45
17.	மன்னனும் மந்திரியும்	46
18.	உப்பு	49
19.	உப்பும் சர்க்கரையும்	52
20.	ஔவையார்	55
21.	கர்வம் ஆகாது	58
22.	சாரணச் சிறுவர்	60

எண்	விஷயம்			பக்கம்
23.	ஒற்றுமை	....	....	64
24.	மதுரைமாநகர்	....	....	67
25.	விடுகதைகள்	....	....	70
26.	எண்ணித் துணிக கருமம்	....	....	71
27.	நீதி போதனை	....	....	74
28.	பருத்தி	....	....	75
29.	ஆறும் ஏரியும்	....	....	78
30.	அதிவீர ராம பாண்டியர்	....	....	80
31.	படப் பழக்கம் (துஷ்டப் பையன்)	....	....	83
32.	கடிதம் படித்தல்	....	....	84
33.	பாடல்கள் (வெற்றி வேற்கை)	....	....	85
34.	தமிழ் மொழி வாழ்த்து	....	....	90

மீனாக்ஷி தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

1. எங்கும் உள்ளவர்

கடவுள் எங்கும் உள்ளவர். அவர் இல்லாத இடமே கிடையாது. நாம் அவரைக் காண முடியாது. ஆனால் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் அவர் கவனித்துக் கொண்டே இருக்கிறார். இதனைப் பின்வரும் கதையால் அறியலாம்.

சோழ நாட்டிலே **கணமங்கலம்** என்ற ஊரில் **தாயனார்** என்று ஒருவர் இருந்தார். அவர் வேளாளர் குலத்தில் பிறந்தவர்; சிவ பக்தியில் சிறந்தவர். தனது மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தார். அவர் தினந்தோறும் செந்நெல் அரிசியும், செங்கீரையும், மாவடுவும் பரமசிவனுக்குப் படைத்து வருவது வழக்கம். ஒரு சமயத்தில் அவர் கையில் இருந்த பொருளெல்லாம் செலவாகிவிட்டது. அதனால் அவர் கூலிக்கு நெல்லறுக்க ஆரம்பித்தார். கூலியாகப் பெறும் செந்நெல்லைக் கடவுளுக்குப் படைத்து, கார்நெல்லையே தாம் உபயோகித்து வந்தார்.

இவ்வாறு நடந்துவரும் நாளில், கடவுள் இவரது பக்தியைச் சோதிக்க எண்ணி, அவ்வூர் முழுவதும் செந்நெல்லே விளையும்படி செய்தார். அப்படியிருந்தும் தாயனார், தன் வீட்டுத் தோட்டத்தில் உள்ள இலைகளைச் சமைத்து உண்டு, கடவுளுக்குச் செந்நெல் சோறு, குறைவில்லாமல் படைத்து வந்தார். நாளடைவில் இலைகளும் தீர்ந்துவிட்டது. அப்பொழுது தாயனார் சுத்த நீரை மட்டும் குடித்து, கடவுள் பணிவிடையை நடத்தி வந்தார்.

ஒருநாள் தாயனார் ஜலம் மட்டும் குடித்து, கடவுளுக்குப் படைப்பதற்காக செந்நெல் சோறு, செங்கீரை, மாவடு முதலியவற்றை ஒரு கூடையில் வைத்து, தலையில் சுமந்து, உடற்சோர்வுடன் கோயிலுக்குத் தள்ளாடி நடந்து சென்றார். அவரது மனைவி தயிர்கொண்டு பின்னே சென்றாள். இவ்வாறு கோயிலுக்குப் போகும் வழியில், தாயனார் பசியினாலே கால் தடுமாறிக் கீழே விழ, பின்னே வரும் அவரது மனைவி அவரைத் தாங்கினாள்.



தாங்கவே அவர் தலையில் இருந்த கூடையும், மனைவி கையில் இருந்த தயிர்க் கலயமும் கீழே விழுந்தன. எல்லாப் பதார்த்தங்களும் மண்ணில் சிதறி விட்டன. இதைக் கண்ட தாயனார் மனம் வருந்தி, "ஐயோ, கடவுளுக்குப் படைப்பதற்குக் கொண்டுவந்த இப்பண்டங்களெல்லாம் என் தப்பிதத்தால் மண்ணில் விழுந்து நாசம் ஆயினவே. கடவுளுக்கு இன்று படைக்க முடியவில்லையே. இனி யான் இறத்தலே மேல்" என்று கூறி மண்டியிட்டு இடுப்

பில் இருந்த அரிவாளை எடுத்து, கழுத்தை வெட்டிக் கொள்ள ஓங்கினர்.

அப்பொழுது திடீரென்று அவ்விடத்தில் பூமி வெடித்து, அவ்வெடிப்பிலிருந்து ஒரு கை நீண்டு, அரிவாள் ஏந்திய தாயனரது கையைப் பிடித்துக் கொண்டது. இதுகண்ட தாயனர், மயங்கி நிற்க, ஆகாயத்தில், "அப்பா! தாயா! உன் பக்திக்கு மெச்சினேன். ஆனல் கோயிலில் படைத்தால்தான் நான் ஏற்றுக் கொள்வேன் என்று நினைத்ததை விட்டுவிடு. **நான் எங்கும் எப்பொழுதும் இருக்கிறேன்.** பக்தியுடன் எங்கே படைத்தாலும் நான் ஏற்றுக் கொள்வேன். இதோ பார்! உனது பதார்த்தங்களை உண்டு, மாவடுவைக் கடிக்கிறேன்" என்ற ஒரு சப்தம் கேட்டது. தாயனரது காதில் மாவடுவைக் கடிக்கும் சப்தமும் கேட்டது. உடனே அவரும் அவரது மனைவியும் கடவுளை வணங்கி ஆனந்தித்தனர். அரிவாளால் கழுத்தை வெட்டிக்கொள்ள ஓங்கியதால் அவருக்கு **அரிவாள் தாய நாயனர்** என்ற பெயர் வந்தது. பின்னர் அவ்விருவரும் கடவுளது உண்மை நிலையை அறிந்து வாழ்ந்து, முடிவில் நற்கதி பெற்றனர்.

கடவுள் எங்கும் உள்ளவர்

2, நான்கு தலைமுறை

இப்பொழுது நமது தேசத்தை ஆளும் சக்கரவர்த்தி **ஆறும் ஜார்ஜ்** என்பவர். இவர் நம்மிடத்தில் மிகவும் அன்பு உள்ளவர். சில வருஷங்களுக்கு முன் இவர் தகப்பனர் **ஐந்தாம் ஜார்ஜ்** என்பவர் அப்பொழுது நடந்த ஐரோப்பிய யுத்த சமயத்தில் இந்திய வீரரின் உடையைத் தரித்துக் கொண்டார். இந்திய வீரர்களை நேரில் பார்வையிட்டார்; நமது நாட்டிற்குச் சீக்கிரம் சுயராஜ்யம் கொடுக்க வேண்டும் என்று பல தடவை கூறியிருக்கிறர். இந்த விஷயத்

தைப் பற்றி ஆலோசிப்பதற்காகவே சமீபத்தில் லண்டனில் கூடிய வட்டமேஜை மகா நாட்டையும் அவர் திறந்து வைத்தார்.

இவர், நம் நாட்டை முதல் முதல் சக்கர வர்த்தினியாய் அரசாண்ட விக்டோரியா மகாராணியாரின் பேரர்.

நம் தேசத்தைக் கிழக்கு இந்திய வர்த்தக சங்கத்தாரிட மிருந்து பெற்று, 1858-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதி முதல் மாட்சிமை தங்கிய விக்டோரியா மகா ராணியார் ஆளத் தொடங்கினர். மகா ராணியார் இந்தியரிடத்தில் வெகு பிரியமா யிருந்தார். குடிகளையும் மிகபட்சமாய் நடத்தினர். இந்தியர்களுக்குப் பல உரிமைகளைக் கொடுத்தார். இவர் 1901-ம் வருஷம் இறந்து போனர்.



அதன் பிறகு, மகா ராணியாரின் மூத்தகுமாரராகிய ஏழாவது எட்வர்டு பட்டத்துக்கு வந்தார். இவர் தான் நமக்கு முதல் சக்கரவர்த்தி. இளவரசராய் இருந்த காலத்தில் நம் இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். இவர் ஒன்பது வருஷ காலம் அரசு புரிந்தார். இவர்

தமது காலத்தில் எங்கும் சமாதானமே பரவும்படி செய்தார். அதனால் இவருக்கு, **சமாதானம் செய்விப்பவர்** என்ற பட்டம் ஏற்பட்டது. இவர் 1910-ம் வருஷம் காலம் சென்றார்.

இவருக்குப்பின் நம்மை அரசாண்டவர் ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி. இவருக்கு முன் ஜார்ஜ் என்ற பெயரோடு நான்கு அரசர்கள் இங்கிலாந்தில் அரசராய் இருந்தார்கள். அதனால் தான் இவருக்கு **ஐந்தாம் ஜார்ஜ்** என்ற பெயர் வந்தது. இவர் எட்வர்டு அரசரின் இரண்டாவது குமாரர். இவர் பட்டத்துக்கு வரும் முன்பே, இவரது மூத்த சகோதரர் இறந்து விட்டார். அதனால் தான் இவருக்கு பட்டம் கிடைத்தது. இவர் 1911-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12-ந் தேதி **டில்லிமா நகரில்** முடிசூட்டிக் கொண்டார். அப்பொழுது ஒரு தர்பார் நடத்தினார். அவ் வைபவத்தைக் காண, பல இந்திய மன்னர்களும் பிரபுக்களும், உத்தியோகஸ்தர்களும் டில்லிக்குச் சென்றனர். அன்றைய தினம் இந்தியா முழுவதும் ஒரு பெரிய உற்சவமாகக் கொண்டாடப்பட்டது. அது முதல் ஒவ்வொரு வருஷமும் டிசம்பர் மாதம் 12-ந் தேதி எல்லா இடங்களிலும் தர்பார் கொண்டாட்டம் நடைபெற்று வந்தது. அன்று பாடசாலை விடுமுறை நாளாகவும் ஏற்பட்டு வந்தது.

ஜார்ஜ் சக்கரவர்த்தி நிரம்ப சுறுசுறுப்பும், நுட்ப புத்தியும் உள்ளவர். இவருக்கு ஐந்து குமாரர்களும், ஒரு பெண்ணும் உண்டு. ஐந்தாம் ஜார்ஜ் 1936-ம் வருஷம் ஜனவரி மாதம் இறந்துபோனார். அவருக்குப் பின் அவருடைய மூத்த குமாரரான எட்வர்டு சக்கரவர்த்தியானார். இவர் நமது தேசத்துக்கு கொஞ்ச காலத்துக்கு முன் வந்

திருந்தார். இவர் பலவித நல்ல குணங்கள் நிரம்பியவர். ஆண் தன்மைக்குரிய பலவித விளையாட்டுக்களிலும் பிரிய முடையவர். அபாயகரமான சந்தர்ப்பங்களில் தைரியமாய் மனவுறுதியைக் கைவிடாமல் தம்மைக் காத்துக்கொள்ளும் திறமை வாய்ந்தவர். இவர் ராஜ்யத்தை வேண்டாமென்று தன் தம்பியாகிய ஆரும் ஜார்ஜுக்குக் கொடுத்து விட்டார். ஆரும் ஜார்ஜ் தன் மனைவியான எலிசபெத் மகாராணியோடு 1937-ம் வருஷம் மே மாதம் பட்டம் கட்டிக் கொண்டார்.

நம் நாட்டில் நமக்கு எவ்வளவு அபிமானம் உண்டோ, அவ்வளவு அபிமானம் நமது சக்கரவர்த்திக்கும் உண்டு. அவர் நமக்குப் பலவகையிலும் நன்மை புரிகிறார். நம் கல்வி வளர்ச்சிக்கு ஏற்ற பாடசாலைகளையும், தேகசௌக்கியத்தைப் பாதுகாக்கத் தக்க வைத்திய சாலைகளையும், சுகாதார அதிகாரிகளையும், நியாயம் தீர்க்கவேண்டிய நியாய ஸ்தலங்களையும், பொது ஜனங்களின் க்ஷேமத்துக்காகப் போலீஸ் இலாகாவையும், தபால், தந்தி, ரயில் முத

லிய போக்கு வரவுக்குரிய பல சௌகரியங்களையும் ஏற்படுத்தி இருக்கிறார். இன்னும் நாம் விரும்பும் பலவித நன்மைகளையும், நமக்கு சுய ஆட்சியையும் தரத் தயாராய் இருக்கிறார்.

ஆகையால் நமது அரசரும் அவருடைய இனத்தாரும் சகல பாக்கியங்களும் பெற்று நன்கு வாழவும், அவர் ஆளும் நமது தேசம் முன்னேற்றம் அடைந்து செழித்து ஓங்கவும் எல்லாம் வல்ல இறைவனைத் தினந்தோறும் துதிப்போமாக.

3. துஷ்ட ஜந்துக்கள்

மனிதருக்குப் பலவிதத்திலும் தீங்கு செய்யும் இயல்புடைய ஜந்துக்களைத் துஷ்ட ஜந்துக்கள் என்று சொல்வது வழக்கம். காட்டு மிருகங்களாகிய சிங்கம், புலி, கரடி, ஓநாய் முதலியவைகளும்; நாட்டில் வாழ்ந்தே நமக்குத் தீங்கு செய்யும் பாம்பு, தேள் முதலியவைகளும் துஷ்ட ஜந்துக்களே. இவைகளில் சிங்கமும், புலியும் மனித மாம்ச ருசிகண்டால், காட்டுக்கு அருகில் உள்ள கிராமங்களில் புகுந்து மனிதரை அறைந்து தூக்கிச் சென்று தின்னும். ஓநாய் மனித வாசனை கண்டால் அவனைத் துரத்தித் துரத்திக் கொன்று தின்னும். இவைகளில் கரடிக்கு மட்டுமே மரம் ஏறத்தெரியும். இவ்வாறு காட்டு மிருகங்களால் நமக்குப் பலவிதத்திலும் தீங்கு நேர்வதுண்டு.

விஷஜந்துக்களாகிய தேள், பாம்பு முதலியவைகளால் ஏற்படும் தீங்கு அதிகம். நம் நாட்டில் விஷ ஜந்துக்களால் இறக்கின்ற ஜனங்களின் தொகை, பிற நாடுகளில் இப்படி இறக்கின்றவர் தொகையைக் காட்டிலும் அதிகமே. அவைகள் நம்மைக் கொல்வதற்காகவே கடவுளால் படைக்கப்படவில்லை. பலகோடி உயிர்களை, கடவுள் ஒன்றுக் கொன்று எவ்விதத்திலேனும் உதவியாய் இருக்கவே படைத்திருக்கிறார். ஆனல் இவ்விஷ ஜந்துக்களுக்கு

ஏற்ற சத்துருக்களையும் அவரே படைத்திருக்கிறார். இது காரணமாகவே கீரியும், பாம்பும் சுபாவ சத்துருக்களாய் இருக்கின்றன. மனிதருக்கு விஷ ஜந்துக்களைக் கண்டால் பயம். அதே மாதிரி அவைகளுக்கும் மனிதரைக் கண்டால் பயம். ஆகையால் நாம் முன் ஜாக்கிரதையாய் இருப்பதோடு, அவைகளுக்கு நாமாகத் தீங்கு ஏதும் செய்யாமல் இருந்தால், அவைகளும் நமக்குத் தீங்கு செய்யா. நாம் அறிந்தோ அறியாமலோ மிதித்தால் எறும்பும் நம்மைக் கடிக்கும். ஆகையால் நம்மால் எந்த விதத்திலாயினும் அவைகளுக்குக் கஷ்டம் ஏற்பட்டால் அவை நம்மைக் கடிக்க வருவது இயல்புதானே!

பாம்பு என்றால் படையும் கலங்கும் என்பது ஒரு பழமொழி. எதிரிகள் எத்தனை பெயர்கள் வந்த போதிலும் அஞ்சாது எதிர்த்து யுத்தம் செய்யும் படைவீரர்களின் நடுவில் ஒரு பாம்பு தோன்றினால் அத்தனை வீரரும் பயந்து ஓடுவர். எதிரில் காணும் பாம்பு, தேள் முதலிய விஷ ஜந்துக்களை, மனிதர் கண்ட இடத்திலேயே கொல்ல முயற்சிக்கிறார்களல்லவா? அதே மாதிரி அவைகளும், தம்மை எங்கே கொன்று விடுகிறார்களோ என்று பயந்து, மனிதரைக் கண்ட இடத்தில் கடிக்க முயற்சிக்கின்றன. இது உலக வழக்கம்.

தேள், நண்டுத்தெறுக்கால் முதலியவைகளுக்குக் கொடுக்கில் விஷம் இருக்கும். பாம்புக்குப் பல்லில் விஷம் இருக்கும். பாம்பின் பல்லை யொட்டி ஒரு விஷப்பை உண்டு. பல் துவாரம் உள்ளதாய் இருக்கும். பாம்பு நம்மைக் கடிக்கும்போது, பையில் உள்ள விஷம் பல் துவாரத்தின் வழியாய், நமது ரத்தத்தில் சேரும். இதனால் வெகு சீக்கிரத்தில் தேகத்தில் உள்ள ரத்தம் முழுவதும் கெட்டு, மரணம் ஏற்படுகிறது.

விஷத்தின் கெடுதியைப் போக்க வழி உண்டு. அவற்றை விரைவிலே செய்தல் நல்லது. இம்முறைகளால்

விஷத்தை ரத்தத்தில் பரவவிடாமல், வெளியேற்ற முயற்சிக்க வேண்டும். பாம்பு கடித்தவுடன், கடித்த இடத்தை நெருப்பினல் சுடலாம். கத்தியால் அறுத்து ரத்தப்பெருக்கு உண்டாகும்படி செய்யலாம். வாயில் புண் இல்லாதவர், அறுத்த இடத்திலிருந்து ரத்தத்தை உறிஞ்சி, வெளியே துப்பலாம். தேள் கொட்டிய இடத்தில், **பெர்மாங்கனேட் ஆப் பொட்டாஷ், டார்ட்டாரிக் ஆஸிட்** இவை இரண்டிலும் சிறிதளவு வைத்து, அதன்மேல் ஒரு துளி தண்ணீர் ஊற்றினல் விஷவேகம் தீரும். எல்லாவற்றிலும் முன் ஜாக்கிரதையே மிகவும் சிலாக்கியமானது.

4. இடறுகல்

நாம் எப்பொழுதும் நமக்கு வேண்டிய காரியங்களையே செய்து கொள்ளுகிறோம். மற்றவருடைய நன்மைக்காக வேலை செய்பவர் மிகச் சிலரே. தெருவில் நடக்கும்பொழுது காலில் முள் தைத்தால், அந்த முள்ளைப் பிடுங்கி நடுத்தெருவிலேயே போட்டுவிடுகிறோம். அவ்வாறு செய்தால், பிறர் காலிலும் அந்த முள் தைக்குமென்று நாம் நினைக்கிறோமா? அவ்வாறு எண்ணினல் அப்படிச் செய்வோமா? தவிரவும், பலர் நடக்கும் தெருவில் ஒரு கல் கிடந்தால் அது அநேகருக்கு இடைஞ்சலாகவே இருக்கும். அக்கல் இடறி நாம் விழுந்தபோதிலும், அதை அப்புறப்படுத்தும் எண்ணம் நம்மவர்களில் யாருக்கும் எளிதில் வருவதில்லை. இதுபோலவே பல ஜனங்களுக்கு ஏற்படும் கஷ்டத்தை நீக்க யாரும் பாடுபடுவதில்லை.

ஒரு ஊரில் நான்கு தெருக்கள் கூடும் ஒரு நாற்சந்தியில் பெருங்கல் ஒன்று கிடந்தது. அவ்வழியில் வரும் ஜனங்கள், வண்டிகள், குதிரைகள் முதலியவைகளுக்கு அதுமிகவும் இடையூருக இருந்தது. இராக்காலங்களில் அக்கல் தடுக்கி, பல வண்டிகள் சாய்ந்து விழுந்தன. நடந்து வந்த மனிதர்கள் பலர் அதன்மேல் விழுந்து

காயம் அடைந்தார்கள். ஆனால் ஒருவரும் அதை அப்புறப்படுத்த நினைக்கவில்லை.

ஒரு நாள் மாலையில் ஒரு பெரிய சீமான் அவ்வழியாய் வண்டியில் வந்து கொண்டிருந்தார். இருட்டில் வழிதெரியாமல் வண்டிக்காரன், அந்தக் கல்லின்மேல் வண்டியை ஏற்றிவிட்டான். வண்டி குடை கவிழ்ந்து விழுந்தது. சீமானுக்குப் பலத்த காயம் பட்டது. அன்று அவர் நினைத்தகாரியம் முடியாமல் போனதோடு பல நாள் படுக்கையில் இருக்கவும் நேர்ந்தது. இவ்வளவு நடந்தும் அக் கல்லை எவரும் அப்புறப்படுத்தவில்லை.

இன்னொரு நாள் நல்ல வெயில் வேளையில் ஒரு கூலியாள் அவ்வழியாக வந்தான். அவன் காலிலும் அக் கல் காயம் உண்டாக்கியது. அவன் பலசாலி. கட்டப்பாரையையும் மண்வெட்டியையும் எடுத்துக்கொண்டு, காலை முதல் வேலைக்காக அலைந்தான். வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. அந்தச் சமயத்தில் அக்கல் காலில் தட்டவே, அவனுக்குப் பொறுக்க முடியாத ஆத்திரம் உண்டாயிற்று. "எனக்கோ இன்று ஒரு வேலையும் கிடைக்கவில்லை. பிறர்க்குக் கெடுதல் செய்யாதபடி இக்கல்லைப் பெயர்த்து எடுத்து எறிந்துவிட்டு வேறு வேலை பார்க்கிறேன்" என்று கூறி உடனே அவ்வேலையைச் செய்ய ஆரம்பித்தான்.

அவன் செய்யும் வேலை மிகவும் கஷ்டமானதாய் இருந்தது. சாயங்கலாம் வரை வேலை செய்தான். அவன் செய்யும் வேலையைப் பார்த்து, அவனை இகழ்ந்தனர் பலர். ஆனால் அவன் மனச் சோர்வு அடையாமல் விடா முயற்சியுடன் வேலை செய்து, கடைசியில் கல்லைப் புரட்டி அப்புறப்படுத்தினான். அதன் கீழ் ஒரு பணப்பை இருந்தது. அப்பையின்மேல் **இக் கல்லைப் புரட்டியவனுக்கு** என்று எழுதியிருந்தது. இதைக்கண்ட பலர், "நாம் இத்தனை நாளாய்க் கிடந்த இக் கல்லைப் புரட்டாமல் இருந்தோமே" என்று கூறி வருத்தப்பட்டனர்.

கூலிக்காரன், தன் கூலிக்குப் பலமடங்கு அதிக மான பணம் தனக்கு கிடைத்ததைக் கண்டு சந்தோஷித் தான். கடவுளைப் பிரார்த்தித்தான். பிறர் நன்மைக்காக உழைத்ததனால் அவனுக்கு அப்பணம் கிடைத்தது. அன்று முதல் அவன் பிறர் நன்மைக்கான காரியங் களையே செய்து வந்தான்.

பிள்ளைகளே! இம்மாதிரியான இடறுகல் எத்த னையோ நீங்கள் சந்திக்க நேரிடும். உடனே அவற்றைக் களையப் பிரயத்தனப்பட வேண்டும். நம் முயற்சி யெல் லாம் உடனே பலன் தரும் என்று எதிர்பாக்க முடியாது. சில முயற்சிகள் அதிக நாள் சென்றபின் பலன் கொடுக் கும். பலனே தராமல் போனாலும் போகும். எப்படி யானாலும் முயற்சி செய்து, கூடுமான வரையில் பிறருக்கு உதவி செய்ய வேண்டியது நமது கடமை என்று நாம் நினைக்க வேண்டியது. பலனைப்பற்றி ஆலோசிக்கக் கூடாது. இவ்வாறு வேலை செய்தால் எப்பொழுதும் நன்மையே உண்டாகும்.

5. புலி

பிள்ளைகளே! நீங்கள் புலியைப் பார்த்திருக்கிறீர்களா? உங்களில் சிலர் புலியை சர்க்கஸ் காட்சியில் பார்த்திருப்பீர்கள். புலி மிகவும் மூர்க்கத்தனம் உள்ள கொடிய பிராணி. ஆனால் சர்க்கஸ் புலிகள் மனிதர் வசப்பட்டு, தம் மூர்க்கத்தனத்தையெல்லாம் இழந்து, அடங்கி ஒடுங்கி இருக்கும். காட்டில் வாழும் புலிகளை, அவைகளை வேட்டையாடுபவர்களே பார்த்திருப்பார்கள்.

புலி பூனையின் இனத்தைச் சேர்ந்தது. வீட்டில் வளரும் பூனைக்கும் அதற்கும் அநேக விதங்களில் ஒற்றுமை உண்டு. ஆகையால் அதை ஒரு காட்டுப்பூனை என்றே சொல்லலாம். பூனையைப் போலவே புலிக்கும் இரவில் கண் தெரியும்; சமயம் போல் நகங்களை உள்ளே இழுத்து வெளியே நீட்டும். புலியும் தன் இரையைக் கண்டதும் பூனை போல் பதுங்கிப் பாயும். புலிக்குப் பூனையைப் போலவே மீசை மயிர் உண்டு. அதன் உதவியாலேயே புலி வழி அறிந்து செல்லும். ஆனால் புலிக்குப் பூனையைக் காட்டிலும் பெரிய தலையும், பெரிய உடலும், அதிக பலமும், மிகுந்த கோபமும் உண்டு. பூனை, பால், சோறு, எலி முதலியவைகளையே தின்னும். புலி மாமிசத்தையே உணவாகக் கொள்ளும். பூனை மரத்தின்மேல் ஏறும். புலியால் ஏற முடியாது. புலி பயமில்லாமல் தண்ணீரில் இறங்கும். பூனை தண்ணீரில் ஒரு பொழுதும் இறங்காது.

புலி உஷ்ண தேசங்களிலேயே வாழும் பிராணி. தென் ஆப்பிரிக்கா, சீனா, இந்தியா முதலிய இடங்களில் அவை உண்டு. நம் இந்தியாவில் வங்காளத்திலும், மலையாளத்திலும் அவை அதிகம். புலிகளில் **வேங்கை, சிறுத்தை** என்ற இரண்டு விதங்கள் உண்டு. இவைகளில் சிறுத்தை தன் பெயருக்குத் தக்கபடி சிறியதாய் இருக்கும். இது மஞ்சள் நிறத்தில் கரும் புள்ளி கலந்த தோலை உடையது.

இது காட்டிலுள்ள சிறுமிருகங்களைக் கொன்று தின்னும். சமயம் வாய்த்தால் மனிதனையும் எதிர்த்துக் கொன்று தின்னும். சிறுத்தையிலும் பலவிதங்கள் உண்டு.

வேங்கை சிறுத்தையை விடப் பெரியது. சுமார் எட்டு அடி நீளமும், நான்கு அடி உயரமும் உள்ளது. பதினாறு அடி நீளமுள்ள **பதினறடி வேங்கை**களும் உண்டு. அதன் உடல் முழுவதும், மஞ்சள் நிறத்தில், கருத்த கோணலான வரிகள் இருக்கும். இதனால் அதை **வரிப்புலி, கொடுவரி** என்று கூறுவதும் உண்டு. அதன் தலை பெரிய



தாகவும் உருண்டையாயும் இருக்கும். கண்கள் மிகவும் பிரகாசமானவை. தலையின் இருபுறத்திலும் இரண்டு காதுகள் அமைந்திருக்கும்.

புலியின் வாய் அகன்று, பார்வைக்குப் பயங்கரமாய் இருக்கும். வாயில் பற்கள் இரண்டு வரிசையாய் அமைந்திருக்கும். அப்பற்கள் மாம்சத்தைக் கிழிப்பதற்குத் தக்க படி கூர்மையாயும் உறுதியாயும் இருக்கும். அதன் நாக்கு சொற சொறப்புள்ளது. புலிக்குச் சிங்கத்தைப் போல் பிடரி மயிர் கிடையாது. அதன் உடலில் மென்மையான

மயிர் உண்டு. அடி வயிறு வெளுத்து இருக்கும். புலியின் கால்கள் குட்டையாயும், பலமுள்ளவைகளாயும் இருக்கும். அதன் பாதத்தில் நீண்டு வளைந்த கூர்மையான நகங்கள் உண்டு. புலி மாம்ச பக்ஷணி. புலி பசித்தாலும் புல்லைத் தின்னது என்றபடி அது புல் பூண்டுகளைத் தின்னது. புலி வெயில் வேளைகளில் புதர்களில் படுத்து உறங்கும். சாயங் காலம் ஆனதும் இரைதேடப் புறப்படும். தண்ணீர் குடிக்க வரும் மான், ஆடு, மாடு முதலிய பல மிருகங்களைக் கொன்று தின்னும் பொருட்டுப் பக்கத்தில் பதுங்கி யிருக் கும். புலி தான் கொன்ற பிராணியை ஓர் இடத்தில் போட்டு விட்டு, பலநாள் அங்கு வந்து தின்றுவிட்டுப் போகும். இதனுலேயே புலியை வேட்டையாடுபவர்கள் அது கொன்று போட்டுவிட்டுப் போன மிருகத்தின் பக் கத்திலேயே பதுங்கியிருந்து, புலி வரும்போது அதைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்வார்கள்.

புலி மனித ரத்தத்தின் ருசி கண்டுவிட்டால், அடிக் கடி மனிதரையே கொன்று தின்னும். காட்டுக்கு அருகில் உள்ள கிராமங்களில் புகுந்து, மனிதரைத் தூக் கிக்கொண்டு போய்க் கொன்று தின்னும். தன்னை எதிர்த்த மனிதரைக் கொல்லாமல் விடாது. இதனுலேயே புலி வேட்டை மிகவும் பயங்கரமானது. யானை மேல் ஏறிக்கொண்டு புலி வேட்டை யாடுவதும் உண்டு. சிங்கத் தின் உயர்ந்த குணங்கள் புலிக்கு இல்லை.

சர்க்கஸ் காட்சிகளில் புலியைப் பிடித்து, பழக்கி வைத்திருக்கிருர்கள். அவர்களிடத்தில் அது நாய் போல் அடங்கி இருக்கும். இருந்தாலும் அது என்றைக் காவது, தன்னை வளர்ப்பவனைக் கொன்றுவிடும். ஆகை யால் புலியுடன் பழகுதல் என்றும் ஆபத்துக்கிடமே. புலியின் தோலை ஆசனமாக உபயோகிக்கிருர்கள். புலி நகங்களை ஆபரணமாக அணிகிருர்கள். புலிப் பல்லை கத்திகளின் பிடிகளாக உபயோகிப்பதும் உண்டு.

6. வீரத்தாதி

நமது இந்தியாதேசத்தில், ராஜபுத்திரர் என்ற ஒரு ஜாதியார் இருந்தனர். அவர்கள் மிகவும் சிறந்த வீரர்கள். பிறருக்கு உதவி செய்ய, உயிரையும் கொடுப்பார்கள். அவர்களுடைய ராஜ்யம், **ராஜபுதனம்** என்பது. ராஜபுதனத்தில் பல பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவுக்கும் தலைவன் ஒருவன் உண்டு. அவனை **ராணா** என்று சொல்லுவார்கள். இந்தப் பிரிவுகளுள் **மீவார்** ராஜ்யம் மிகவும் பெயர் பெற்றது. அதை **விக்கிரமஜித்** என்னும் ராணா ஆண்டு வந்தான்.

மீவாரில் **பம்பீர்** என்பவன் சேனாதிபதியாய் இருந்தான். அவன் மகா கொடியவன். திடீரென விக்ரமஜித்தைக் கொன்று விட்டான். ராஜ்யத்தைப் பிடுங்கிக் கொண்டான். தான் அரசனாக நிலைத்திருக்கவேண்டி, இன்னும் அந்த ராணாவைச் சேர்த்தவர்கள் எல்லோரையும் கொல்ல வழி தேடினான். அப்பொழுது விக்ரமஜித்தின் தம்பியான **உதயசிங்** சிறு பிள்ளையாய் இருந்தான். அவன் **பன்னா** என்னும் தாதியால் வளர்க்கப்பட்டு வந்தான். பன்னா விக்கிரமஜித்தினிடம் வேலை பார்த்தவள்.

பம்பீர் விக்கிரமஜித்தைக் கொன்றதையும், உதயசிங்கைக் கொல்ல எண்ணியிருப்பதையும் அவள் அறிவாள். ஆகையால் எப்படியும் ராஜகுமாரனான உதயசிங்கைக் காப்பாற்ற நினைத்தாள். விக்கிரமஜித்திடம் வேலை பார்த்த நம்பிக்கை யுள்ள வேலைக்காரன் ஒருவனை நாடினாள். அவனும் அவளுக்கு உதவி செய்வதாய் வாக்களித்தான். ஆனால் பம்பீர், உதயசிங்கை வெளியே கொண்டு போக முடியாதபடி காவல் வைத்திருந்தான். ஆகையால் அவர்களால் ஒன்றும் முடியவில்லை.

இவ்வாறு சிலகாலம் சென்ற பிறகு, ஒருநாள் நடு இரவில் அந்த வேலைக்காரன் பன்னாவிடம் ஓடிவந்து, "அம்மா! பெரிய ஆபத்து வந்துவிட்டதே. இனி என்ன

செய்வோம்? பம்பீர் உருவிய கத்தியுடன் நம் இளவரசனை வெட்ட வருகிறான். தப்பவழியில்லையே!" என்று மிக்க பரப்பரபுடனும் விசனத்துடனும் கூறினான். உடனே பன்னா சமயத்திற்குத் தகுந்தயோசனையுடையவளாதலால், ஒருகூடையில் உதயசிங்கை வைத்து, அவன் மேல் பழங்களையும் இலைகளையும் போட்டு நன்குமூடி, அவ்வேலைக் காரன் கையில் ஒப்புவித்தாள். அவனும் அதைத் தலைமேல் வைத்துக்கொண்டு வெளியே சென்றான். காவலர் அது பழக்கூடை என்று எண்ணிப் பேசாமல் இருந்துவிட்டனர்.

பம்பீர் உள்ளே நுழைவதற்குள், நொடிப்பொழுதில் பன்னா உதயசிங் இருந்த தொட்டிலில், அதே வயதுள்ள தன் குழந்தையைப் படுக்கவைத்திருந்தாள். உருவிய கத்தியுடன் பம்பீர் உள்ளே நுழைந்து, "எங்கே ராஜகுமாரன்! ராஜகுமாரன் எங்கே!! உடனே காண்பிப்பாய்" என்று கோபத்துடன் கூறினான். ஆனால் பன்னாவோ, தொட்டிலையே பார்த்த வண்ணமாய் இருந்தாள். பம்பீரும் தொட்டிலில் இருந்த குழந்தையே உதயசிங் என்று எண்ணி, கத்தியால் அதை வெட்டிவிட்டு, வெளியே சென்றான். ராஜ குமாரனைக் காப்பாற்ற, தன் குழந்தை இறந்ததற்காகப் பன்னா சிறிதும் விசனப்படவில்லை. ஆனால் அரண்மனையைவிட்டு வெளியே சென்றுவிட்டாள்.

உதயசிங்கைக் கொண்டு சென்ற வேலைக்காரன் ஒருவருக்கும் தெரியாமல் அவனை வளர்த்துவந்தான். நாளடைவில் உதயசிங் சகல வித்தைகளையும் கற்று பெரிய வீரனானான். தன் பிறப்பு வளர்ப்பை அறிந்தான். வேண்டிய படைகளைத் திரட்டி, மீவார்மேல் படையெடுத்து பம்பீரைக்கொன்று, தான் ராணாவானான். பெற்ற பிள்ளையைக் கொடுத்து தன்னைக் காத்த, பன்னாவைத் தேடிப் பிடித்தான். அவளை அரண்மனையிலேயே, தன் சொந்தத் தாய்போல் பாராட்டிப் போஷித்து வந்தான்.

ஆனால் என்ன செய்தாலும் பன்னு செய்த உதவிக்கு இணையாகுமா? அவளுடைய உதவியே உதவி! அவளே **வீரத்தாதி.**

7. நமது தேசம்

பூமி உருண்டை வடிவமானது என்று முன் புத்தகத்தில் படித்தீர்கள். இந்த உருண்டை வடிவமான பூமியே நமது உலகம். நமது உலகம் நீர் நிலம் இவைகள் நிரம்பியது. நீர்ப் பாகத்திற்கு சமுத்திரம் என்று பெயர். நிலப்பாகம் முழுவதும் ஐந்து பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அப்பாகங்களுக்குக் **கண்டங்கள்** என்று பெயர். **ஆசியா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ஆபிரிக்கா** என்று அவ்வைந்து கண்டங்களுக்கும் பெயர். ஒவ்வொரு கண்டத்திலும் பல தேசங்கள் உண்டு.

நாம் வசிக்கும் தேசத்தை **நமது தேசம்** என்று கூறுகிறோம். நமது தேசம் **இந்தியா** எனப்படும். இந்தியா தேசம் ஆசியா கண்டத்தின் ஒரு பாகம். இது முன் காலத்தில் **பரதகண்டம்** என்று பெயர் பெற்றிருந்தது. **பரதன்** என்ற ஓர் அரசன் நம் தேசத்தை அக்காலத்தில் ஆண்டு வந்ததால், இதற்குப் பரதகண்டம் என்று பெயர் வந்தது. **பரதநாடு** என்றும் நமது தேசத்தைச் சொல்வது உண்டு. ஆரியர்கள் சிந்து நதிக்கரையில் வந்து தங்கி, **சிந்துதேசம்** என்று பெயரிட்டார்கள். அதிலிருந்து அப்பெயர் **இந்தியா** என்று மாறியது.

நமது தேசம் ஆசியா கண்டத்தின் தென்பாகத்தில் உள்ள ஒரு **தீபகற்பம்.** மூன்று பக்கங்களில் ஜலபாகத்தால் சூழப்பட்ட ஒரு தேசத்திற்குத் தீபகற்பம் என்று பெயர். நமது இந்தியா தேசத்தின் படத்தைப் பாருங்கள். கிழக்குப் பக்கத்தில் **வங்காளக்குடாக் கடலும்,** மேற்குப் பக்கத்தில் **அரபிக் கடலும்,** தெற்குப் பக்கத்தில் **இந்து மகா சமுத்திரமும்** இருக்கின்றன. நமது தேசத்தின் வடக்கே **இமயமலை** என்னும் பெருமை பொருந்திய, உயர

மான மலைத்தொடர் இருக்கிறது. இது தவிர, அரவலிமலை, மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலை முதலிய பல மலைகளும் உண்டு. இம்மலையிலிருந்து கங்கை, யமுனை, பிரம்மபுத்திரா, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, தபதி, சிந்து காவிரி முதலிய நதிகள் உற்பத்தியாகி நமது தேசத்தைப் பலவிதத்திலும் செழிப்புள்ளதாகச் செய்கின்றன.



இவ்வாறு பல நதிகள் பாய்வதால் நமது தேசம் விவசாயம் பெருத்ததாய் இருக்கிறது. முன் காலத்தில் நமது தேசம் கல்வி, விவசாயம், வியாபாரம், கைத்தொழில், போர்த்தொழில் முதலியவைகளில் சிறந்திருந்தது. நமது தேசத்தில் சுமார் 35 கோடி ஜனங்கள் இருக்கிறார்கள். இங்கே தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளுவம், ஹிந்தி, உருது, மகாராஷ்டிரம், வங்காளம், ஒரியா முதலிய பல பாஷைகள் வழங்கி வருகின்றன. முன் காலத்தில் நமது தேசம் இந்து அரசர்களால் ஆளப்பட்டது. பிறகு முகமதியர்களும், மொகலாயர்களும் அரசாண்டார்கள். கடைசி

யாக 1858-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதி முதல் ஆங்கிலேய அரசாட்சி ஏற்பட்டிருக்கிறது.

நம் இந்தியாவில் **பம்பாய், வங்காளம், பஞ்சாப், மத்திய மாகாணம், பீகார், ஒரிசா, சென்னை** முதலிய பல மாகாணங்கள் இருக்கின்றன. இந்த மாகாணங்களும் **திருவநந்தபுரம், கொச்சி, மைசூர், ஹைதராபாத், ராஜபுதனம், நேபாளம், காஷ்மீர்** முதலிய பல சுதேச சமஸ்தானங்களும் சேர்ந்து நமது தேசமாகும். ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு **கவர்னர்** உண்டு. எல்லாக் கவர்னர்களுக்கும் மேல் நமது அரசரின் பிரதிநிதியாய் **வைஸ்ராய்** என்னும் **இராஜப்பிரதிநிதி** இருக்கிறார். சுதேச சமஸ்தானங்களைப் பல சிற்றரசர்கள் அரசாண்டு வருகின்றனர்.

இவற்றில் சென்னை மாகாணமே நமது மாகாணம். இதன் தலைநகர் **சென்னைப்பட்டணம்**. நமது மாகாணத்தில் 26 ஜில்லாக்களும், திருவநந்தபுரம், கொச்சி, மைசூர், புதுக்கோட்டை முதலிய சுதேச சமஸ்தானங்களும் அடங்கியிருக்கின்றன. நமது மாகாணத்தில் பற்பல ஜில்லாக்களிலும் உள்ள கோவில்கள், கட்டிடங்கள் முதலியவைகள் சிறந்த சிற்ப சாஸ்திரப் பொக்கிஷங்களாய் இருக்கின்றன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பாஷைகளே நமது மாகாணத்தில் முக்கியமாய் வழங்குகின்றன.

புண்ணிய க்ஷேத்திரங்கள், சிறந்த புலவர்கள், உயர்ந்த சிற்ப வேலைகள் அமைந்த கட்டிடங்கள் முதலியவை சிறந்து விளங்கிய நமது தேசம் ஆங்கில அரசாட்சியில் பலவித நன்மைகள் அடைந்தது. தேசத்தில் அமைதி நிலைநின்றது. போக்கு வரவுக்குரிய பல சாதனங்கள் ஏற்பட்டன. பல சீர்திருத்தங்கள் கொடுக்கப்பட்டன. படிப்படியாக நம் இந்தியாவுக்குச் சுய ஆட்சிகொடுக்க, ஆங்கில அரசாட்சியார் தீர்மானித்து விட்டனர். ஆகை

யால் நாமும், நமது தேசமும் பலவிதத்திலும் முன்னேற்ற மடைந்து சிறந்து வாழ எல்லாம் வல்ல இறைவனைத் துதிப்போமாக.

8. உண்மையின் பெருமை

(பாட்டு – கும்மி)

உண்மையே பேசுவதின் உயர்வை விளக்கியே
ஓர் கதை சொல்லுவேன் பாலர்களே!
திண்மையாய் நீங்கள் எல்லோரும் அதைக்கொண்டு
சிறந்து விளங்குவீர் சீலர்களே! 1

சோழவள நாட்டில் வேளாளர் ஜாதியில்
சுப்பிரமணியப் பிள்ளை என்றொருவர்
வாழ்வில் வறுமையில் மக்கள் ஐவரோடும்
வாழ்ந்திருந்தார் மிகத் தாழ்ந்திருந்தார். 2

ஆண்மக்கள் மூவரும் தம்மால் இயன்ற
அளவு முயன்று பணந்தேடவே
வீண்மக்க ளல்லாமல் பெண்மக்க ளிருவரும்
வீட்டில் உழைத்தனர் ஊக்கமுடன். 3

இவ்விதம் வாழ்ந்திடும் நாளில் ஓர் நாளையில்
எங்கும் நிறைந்தவ னின்செயலால்
எவ்விதமும் பாவம் செய்யாத சுந்தரம்
என்னும் முதல்மகன் வேலைசெய்த 4

ஜவுளிகள் விற்றிடும் வணிகன் அந்த ஊர்
ஜமீன் தாராயஓர் சீலரிடம்
'ஜவுளிகள் காட்டி வியாபாரம் செய்துவா
ஜாக்கிரதை' என்றனன் சுந்தரத்தை. 5

அவ்வாறே கொண்டுபோய் நூற்றைம்பது ரூபாய்
ஆகும் விலையென ஓர்புடவை
இவ்வாறே கூறி அவர் வாங்கிடச் செய்து
ஏகினனே சுந்தரம் கடைக்கு. 6

கடைக்கு வந்தபின் மூட்டையை அவிழ்த்துக்
காட்டிப் பணம் தரும் காலையிலே

நடத்தை சிறிதும் தவறாத சுந்தரம்
நடுங்கியே இது சொல்லுகிறான். 7

"ஐயோ ! என்ன சொல்வேன் நூறு ரூபாய் விலை
ஆகும் புடவையை நூற்றைம்பதாய்ப்
பொய்யாய் விலை கூறி விற்று விட்டேன் அந்தப்
புண்ணிய வானிடம் போய் வருவேன்." 8

என்றதும் வியாபாரி, "என்னடா முட்டாளே !
இப்படி வந்த பெரும் பொருளை
ஒன்றும் அறியாது கொண்டு கொடுப்பேனென்
றுளறுகிறாய் அடா பைத்தியமே !" 9

இப்படியே அவன் சொல்லியும் கேளாமல்
எழுந்து சுந்தரம் ஓடினதால்
அப்படியே அந்தப் பேராசைக் காரனும்
அவனைப் பின் தொடர்ந் தோடினனே. 10

புண்ணியவான் அந்த ஜமீன் தாரைக் கண்டு
புடவை விலையில் அதிகமதைக்
கண்ணிய மாகத் திருப்பிக் கொடுத்ததைக்
கண்டவர் ஆச்சர்யப் பட்டனரே. 11

"ஐயா ! என் குற்றத்தை மன்னித்து நீர் இதை
அங்கீகரிப்பீர்" என் றவனே சொல்லப்
"பையா ! உனக்கே நான் தந்திடுவேன் இந்தப்
பணத்தைக் கொண்டுபோ" என்றனரே. 12

"வேண்டாம் ! என்றே பையன் வெளியில் திரும்பிட
வியாபாரி அவனைக் கைப்பிடித்தே
"வேண்டாம் எனக்கினி ஓடிவிடு" என்றே
வெருட்டி விட்டானவன் சுந்தரத்தை. 13

தந்தையிடம் சென்று தான் செய்த செய்கையையும்
தன் யஜமானனின் செய்கையையும்
சுந்தரம் சொல்லிக் கேட்டவர் மகிழ்ந்து
துயரமே கொள்ளா திருந்தனரே. 14

செல்வச் சீமானந்தச் சிறுவன் சுந்தரம்
செவ்விய நடத்தை கண்டுவந்து

பல்வகையால் அவன் மேன்மை யுறும்படி
பதவியைத் தந்தவர் ஆதரித்தார். 15

பிள்ளைகளே! இவன் உண்மையைப் பேசியே
பெற்ற பெருமையைக் கண்டீர்களா!
கள்ளம் இல்லாமலே உண்மைதனைப் பேசி
கனம டைகுவீர் நீங்களுமே. 16

9. காற்று

இந்த உலகத்தில் பிராணிகள் வாழ்வதற்கு மிகவும் அவசியமானவை **காற்று, தண்ணீர், ஆகாரம்** ஆகிய மூன்றுமே. இம்மூன்றும் எல்லா பிராணிகளுக்கும் எப்போதும் வேண்டியவை. ஆகாரம் இல்லாமல் சில நாள் வரை வாழலாம். தண்ணீர் இல்லாமல் சில மணி நேரம் வாழலாம். ஆனால் காற்று இல்லாமல் அரைக்கணமும் வாழமுடியாது. ஆகையால் இம்மூன்றிலும் உயிர் வாழ்வதற்குக் காற்றே மிகவும் அவசியமானது என்பது திண்ணம். உயிர்ப் பிராணிகள் தவிர, புல், பூண்டு, மரம், செடி, கொடி முதலியவைகளுக்கும் காற்று மிகவும் அவசியமானது. காற்று இல்லாத இடத்தில் இவை சீக்கிரத்தில் நசித்துப்போய் விடும்.

காற்று இந்த உலகம் முழுவதும் பரவி யிருக்கிறது. ஆனால் அது நமது கண்ணுக்குத் தெரியவில்லை. காற்று அசையும் பொழுது நமக்கு நன்றாய்த் தெரிகிறது. அது அசையாதிருக்கும்பொழுது, நமக்குத் தெரியாது. ஆனால் உடனே ஒரு விசிறியால் வீசினால், காற்று இருப்பது தெரியும். இதனால் காற்று எங்கும் எப்பொழுதும் நிரம்பி இருக்கிறது என்று தெரிகிறது. காற்று அசையாது இருந்தால் அது வாயு என்று சொல்லப்படும்.

பிராணிகள் உயிரோடு வாழ்வதற்கு வாயு அதிக அவசியமானது. ஆனால் அந்த வாயு மிகவும் சுத்தமாக இருக்க வேண்டும். இவ்வுலகில் உள்ள ஒவ்வொரு உயிர்ப்

பிராணியும், சுத்தமான காற்றை உட்கொண்டு, அசுத்தமான காற்றை வெளிவிடுகின்றது. உள்ளே செல்லும் சுத்தமான காற்று **பிராணவாயு** எனப்படும். இவ்விதம் உள்ளே செல்லும் சுத்தமான பிராணவாயு பிராணிகளின் தேகத்தினுள்ளே இருக்கும் அசுத்தங்களை எடுத்துக்கொண்டு வெளியே வருகின்றது. நாம் மூச்சு வெளிவிடும்போதெல்லாம் அசுத்தமான காற்றே வெளி வருகின்றது. இதனால் வெளியே உள்ள சுத்தமான காற்று ஒவ்வொரு நிமிஷமும் அசுத்தமாகிக் கொண்டே வருகிறது.

ஆனால் நாம் வெளிவிடும் அசுத்தமான காற்றே இவ்வுலகம் முழுதும் நிரம்பிவிடுமே; திரும்பவும் நாம் உட்கொள்ள வேண்டிய சுத்தமான காற்று எங்கிருந்து கிடைக்கிறது? பிராணிகள் எப்படிச் சுத்தமான காற்றை உட்கொண்டு, அசுத்தமான காற்றை வெளிவிடுகின்றனவோ, அதே மாதிரி செடிகள் முதலிய தாவரங்கள் சூரிய வெளிச்சத்தில் அசுத்தமான காற்றை உட்கொண்டு சுத்தமான காற்றை வெளிவிடுகின்றன. ஆகையால் தாவரங்கள், நமக்குக் கெடுதல் செய்யும் அசுத்தமான காற்றை உட்கொண்டு, நமக்கு மிகவும் அவசியமுள்ள சுத்தமான காற்றைத் தருகின்றன. அவை நமது வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானவை. இதனாலேயே அவைகளின் வளர்ச்சிக்கு நாம் பாடுபட வேண்டும்.

உட்கொள்ளும் காற்று மிகவும் சுத்தமாய் இருந்தால், தேகத்தில் உள்ள அசுத்தத்தில் பெரும் பாகத்தை வெளியே கொண்டுவரும். உட்கொள்ளும் காற்றே அசுத்தமாய் இருந்தால், தேகத்தில் ஒவ்வொரு நிமிஷமும் உண்டாகும் அசுத்தத்தில் சிறிதுகூட வெளியேறாது. தேகத்தில் உள்ள அசுத்தம் காற்றின் மூலமாய் வெளியேறா விட்டால், சுவாச உறுப்புகள் சம்பந்தமான வியாதிகள் உண்டாகும். ஆகையால் நாம் சுவாசிக்கும் காற்று

சுத்தமாய் இருக்கும்படி கவனித்துக் கொள்ளவேண்டும். இதற்கு நாம் கவனிக்க வேண்டியவைகளில் முக்கிய மானவை பின்வருமாறு :—

நல்ல காற்றோட்டமுள்ள இடத்திலேயே வசிக்க வேண்டும். வீடுகள் மேடான இடத்திலும், விசாலமாகவும் கட்டவேண்டும். ஒரு வீட்டிற்கும் மற்றொரு வீட்டிற்கும் நடுவில் போதுமான இடைவெளி இருக்கவேண்டும். வீடு களை நெருக்கமாகக் கட்டக்கூடாது. ஒவ்வொரு வீட்டைச் சுற்றிலும் காற்றோட்டமுள்ள வெளிப்பிரதேசம் இருக்க வேண்டும். ஒரே வீட்டில் பல ஜனங்கள் நெருக்கமாக வசிக்கக்கூடாது. வீட்டில் காற்றோட்டத்திற்காகக் கதவு களும், பலகணிகளும் வேண்டிய அளவு அமைக்கவேண் டும். படுக்கும் அறையில் பல சாமான்களை அடுக்கி வைக் கக்கூடாது. தூங்கும்பொழுது, பலகணிகளையும் கதவு களையும் மூடிவிட்டுத் தூங்கக் கூடாது.

நாம் மூக்குத் துவாரங்களின் வழியாகவே சுவாசிக்க வேண்டும். வாய் வழியாக சுவாசிக்கக்கூடாது. மூக்கின் உள்ளே இருக்கும் மயிர்கள் சல்லடைபோல் அமைந்திருக் கின்றபடியால் உட்செல்லும் காற்றிலுள்ள அசுத்தத்தை அம்மயிர்ச் சல்லடை வடிகட்டிச் சுத்தமாக்கிவிடும். இம் மாதிரி செய்வதற்கு வாயில் ஒருவித ஏற்பாடும் இல்லை யாகையால் மூக்கின் வழியாகவே சுவாசித்தால்தான் நலம். இருந்தாலும் மிகவும் அசுத்தமான காற்றை வடிகட்ட மூக்கிற்கும் சக்தி இல்லை. ஆதலால் நாம் கூடுமானவரை மிகவும் சுத்தமான காற்றையே சுவாசிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அசுத்தமான காற்று உள்ளே சென்றால், தேகத்தில் உள்ள ரத்தத்தைக் கெடுத்து பலவித வியாதி களை உண்டாக்கும்.

காற்று சம்பந்தமாக மேற்கூறிய விஷயங்களைக் கவ னித்து அதன்படி நடந்தால் நோயற்ற வாழ்வை அடைய

லாம். இது பற்றியே **காற்றுள இடத்திரு, நற்காற்றுட்கோள், வாய்வழி உயிரேல்** என்ற சுகாதார வாக்கியங்களும் கூறப்பட்டுள்ளன.

10. காற்றின் சக்தி

உபாத்தியாயர் :—பிள்ளைகளே! காற்றைப்பற்றிப் போன பாடத்தில் படித்ததிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்ட விஷயங்கள் எவை?

சுந்தரம் :—ஐயா! நாம் உயிரோடு வாழ்வதற்கு, காற்று, தண்ணீர், உணவு இவைகள் அவசியமானவை என்றும், அவற்றுள் காற்று இல்லாமல் நாம் ஒரு நிமிஷமும் உயிரோடு வாழ முடியாது என்றும், சுத்தமான காற்றையே உட்கொள்ள வேண்டுமென்றும் இன்னும் பிற விஷயங்களும் தெரிந்து கொண்டோம்.

கோபாலன் :—தவிரவும் காற்று எல்லா இடத்திலும் பரவி யிருக்கிறது என்றும் தெரிந்து கொண்டோம்.

உபாத்தியாயர் :—நீங்கள் காற்றைக் கண்ணுல் பார்க்க முடியுமா?

சுந்தரம் :—ஐயா! காற்றைக் கண்ணுல் பார்க்க முடியாது. ஆனுல் மரத்தின் இலைகள் அசைவதாலும், காற்று வீசி அடிக்கும்போதும், விசிறியால் விசிறிக் கொள்ளும்போதும் காற்று இருப்பதை அறியலாம்.

உபாத்தியாயர் :—ஆகையால் பிள்ளைகளே! கண்ணுல் காண முடியாதாயின் ஒரு பொருள் இல்லை யென்று தீர்மானம் செய்யக்கூடாது. காற்று இல்லாத இடமே கிடையாது. இதோ இந்தக் கண்ணுடிப் பாத்திரத்தில் என்ன இருக்கிறது?

கோபாலன் :—ஐயா! இதில் ஒன்றும் இல்லை. இது வெறும் பாத்திரமாக இருக்கிறது.

உபாத்தியாயர் :—பிள்ளைகளே! கோபாலன் சொல்வது பிசகு. இதற்குள்ளும் காற்று இருக்கிறது. அதோ

அங்கே இருக்கும் தண்ணீர் உள்ள கண்ணாடித் தொட்டியில், இந்தப் பாத்திரத்தைத் தலைகீழாய் அமிழ்த்திப் பாருங்கள்.



சுந்தரம் :—ஐயா ! இதோ அமிழ்த்தியிருக்கிறேன். கையால் பலமாய் அழுத்தினால் சிறிது தூரம் தண்ணீர் பாத்திரத்தில் ஏறுகிறது. பாத்திரத்தைச் சாதாரணமாய்ப் பிடித்துக் கொண்டிருப்பதால் தண்ணீர் முன்போல் உட்சென்றிருப்பதாகத் தெரியவில்லை.

உபாத்தியாயர் :—இதனால் என்ன தெரிந்து கொண்டீர்கள் ? அப்பாத்திரத்தில் தண்ணீரைப் புகவிடாமல் தடுக்கக் கூடிய வேறொரு வஸ்து இருக்க வேண்டும் என்று நன்றாய்த் தெரிகிறதல்லவா ? அது என்ன வஸ்து என்று இனித் தெரிந்து கொள்வோம். நாம் தண்ணீருக்குள் மூச்சு விட்டால், மேலே குமிழி கிளம்புகிறதல்லவா ?

கோபாலன் :—ஆம், ஐயா ! நான் பார்த்திருக்கிறேன். அதுபோல் இங்கும் குமிழி கிளம்பினால் இந்தப் பாத்திரத்துள் காற்று இருக்கிறது என்று அறியலாம்.

உபாத்தியாயர் :—அப்படியானால் அந்தப் பாத்திரத்தைத் தண்ணீருக்குள் சிறிது சாய்த்துப் பிடி. குமிழி கிளம்புகிறதா என்று பார்.



சுந்தரம் :—ஆம் ! இதோ அநேகக் குமிழிகள் கிளம்புகின்றன. இதோ இப்பொழுது பாத்திரம் முழுவதும் தண்ணீர் நிரம்பி விட்டது.

உபாத்தியாயர் :—எல்லாக் காற்றும் வெளியேறியதும், பாத்திரம் முழுவதும் தண்ணீர் நிரம்பி விட்டது. நல்லது

இப்பொழுது காற்றின் தன்மையைச் சற்றுக் கவனிப்போம். காற்றுக்குப் பலவித சக்திகள் உண்டு. காற்றின் உதவியால் பல இயந்திரங்கள் வேலை செய்கின்றன. இது உங்களுக்குத் தெரியுமா?

மாணிக்கம் :—ஐயா! ஆகாயத்தில் காற்றுடி எப்படிப் பறக்கிறது.

உபாத்தியாயர் :—இலேசான வஸ்துக்களைத் தாங்குவதற்குக் காற்றுக்குச் சக்தி உண்டு. காற்றைக் காட்டிலும் காற்றுடி இலேசானதால், அது காற்றில் பறக்கிறது. இதே மாதிரிதான் **புகைக் கூண்டு, ஏரோப்ளேன்** என்னும் **ஆகாயக்கப்பல்** முதலியவை ஆகாயத்தில் பறக்கின்றன.

கோபாலன் :—ஐயா! நான் நேற்று என் தம்பிக்கு ஒரு விளையாட்டுக் காட்டினேன். சிறிய பாத்திரம் ஒன்றில் நிறையத் தண்ணீர் ஊற்றினேன். பிறகு ஒரு இலேசான காகிதத்தால் மூடி, தலை கீழாய்க் கவிழ்த்தேன். காகிதம் விழவில்லை. அப்பாத்திரத்துள் இருந்த தண்ணீரில் சிறிதும் கீழே விழவில்லை. இதற்குக் காரணம் என்ன?





சுந்தரம் :—ஐயா! நான் கூட ஒரு வேடிக்கை செய்தேன். கடையில் விற்கும் புகை விளக்கு ஒன்று வாங்கி திரியுள்ள அதன்மேல் மூடியைக் கழற்றி விட்டேன். பிறகு அதன் அடிப்பாகத்தில் பல சிறிய துவாரங்கள் செய்தேன். அதில் நிறையத் தண்ணீர் விட்டு, மேல் புறத்தைக் கைக் கட்டை விரலால் மூடிக் கொண்டேன். கீழே உள்ள துவாரங்களின் வழியாய் ஒரு துளி தண்ணீர்கூடக் கீழே விழவில்லை. பிறகு விரலை எடுத்தேன். தண்ணீர் எல்லாம் கீழே விழுந்துவிட்டது. இதன் காரணம் என்ன?

உபாத்தியாயர் :—நீங்கள் இரண்டுபேர் செய்த வேடிக்கைகளும் காற்றின் சக்தியைக் காண்பிக்கின்றன. காற்றுக்குக் **கீழிருந்து மேல் நோக்கி அமுத்தும்** சக்தியும், **மேலிருந்து கீழ் நோக்கி அமுத்தும்** சக்தியும், **நான்கு பக்கங்களில் அமுத்தும்** சக்தியும் உண்டு. இவைகளில் கீழ்நோக்கி அமுத்தும் சக்தியும், மேல் நோக்கி அமுத்தும் சக்தியும் ஒன்றுக்கொன்று எதிர்த்து வேலை செய்யும். எதன் சக்தி அதிகமாய் இருக்கிறதோ, அதன் வேகமே வேலை செய்யும். உதாரணமாக, கோபாலன் செய்த வேடிக்கையிலும், சுந்தரம் கைவிரலால் மூடிக்கொண்டு செய்த வேடிக்கையிலும் கீழிருந்து மேல் நோக்கி அமுத்தும் காற்றின் சக்தியாலேயே தண்ணீர் கீழேவிழாமல் நின்றது. அதை எதிர்ப்பதற்கு மேலிருந்து கீழ்நோக்கி அமுத்தும் காற்று அங்கு இல்லை.

கோபாலன் :—ஆனல் சுந்தரம் விரலை எடுத்ததும் ஏன் தண்ணீரெல்லாம் கீழே விழுந்துவிட்டது ?

உபாத்தியாயர் :—சுத்தரம் விரலை எடுத்ததும்,மேலிருந்து கீழ்நோக்கி அமுத்தும் காற்றும் வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. தண்ணீர் தன் கனத்தால் கீழே விழப் பார்க்கிறது. அப்போது மேல் நோக்கி அமுத்தும் சக்தியைக் காட்டிலும் கீழ் நோக்கி அமுத்தும் சக்தி அதிகம் ஏற்பட்டு, தண்ணீர் எல்லாம் கீழே விழுந்துவிட்டது. காற்றின் பலவித சக்தியால் நாம் அநேக நன்மைகளை அடைகிறோம். நான்கு பக்கங்களிலும் அமுத்தும் சக்தியால் பாய்மரம் உள்ள கப்பல் ஓடுகிறது. பழைய காலத்தில் மாவு அரைக்கும் இயந்திரம் வேலை செய்தது. தற்காலத்தில் தண்ணீர் இறைக்கின்ற இயந்திரங்களும் பல நூதன இயந்திரங்களும் அற்புதமான வேலைகளைச் செய்கின்றன. இவைகளைப்பற்றி நீங்கள் மேல் வகுப்பில் அறிந்து கொள்ளலாம்.

11. பேராசை பெரு நஷ்டம்

ஒவ்வொருவரும் தனக்குக் கிடைப்பதைக் கொண்டு திருப்தி அடையவேண்டும். இவ்வாறு கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடையாமல், இன்னும் அதிகம் கிடைக்கவேண்டுமென்று எண்ணுவதுதான் பேராசை. அப்படி ஆசைப்பட்டால் சாதாரணமாகக் கிடைப்பதும் போய்விடும். இதனல்தான் **போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து** என்று பெரியோர் கூறியிருக்கின்றனர்.

பாதூர் என்ற கிராமத்தில் **பரமன்** என்ற விறகு வெட்டி இருந்தான். அவனுக்கு ஒரு மனைவியும், ஐந்து குழந்தைகளும் உண்டு. தினந்தோறும் அவ்வூருக்கு அருகில் உள்ள காட்டிற்குச்சென்று விறகு வெட்டி, அதை விற்றுத் தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான். தனக்குக் கிடைக்கும் பணத்தில் அவன் மிகவும் திருப்தியடைந்து, கடவுளை மனமார வாழ்த்தி வந்தான். அதே ஊரில் **ராமன்** என்ற மற்றொரு விறகுவெட்டியும் இருந்தான். அவனுக்குத் தினந்தோறும் பரமனைக் காட்டிலும் அதிகப்பணம் கிடைக்கும்; அப்படிக் கிடைத்தும் அவன் திருப்தி அடையாமல் "தெய்வமே! உனக்குக் கண் இல்லையா? நானும் உழைக்கிறேன்; பரமனும் உழைக்கிறான். அவன் சந்தோஷமாய் இருக்க, நான் மட்டும் ஏன் இப்படிக் கஷ்டப்படவேண்டும்" என்று அடிக்கடி கடவுளையே நொந்து கொள்வான்.

ஒரு நாள் பரமன் தனது கோடரியை எடுத்துக் கொண்டு, வழக்கம்போல் விறகு வெட்டுவதற்காகக் காட்டிற்குச் சென்றான். காட்டில் ஒரு ஏரிக் கரையில் இருந்த மரம் ஒன்றை வெட்டத் தொடங்கினான். அவ்வாறு அவன் வெட்டிக்கொண்டிருக்கும்போது அவனது கோடரி கை தவறி ஏரிக்குள் விழுந்துவிட்டது. அந்த ஏரி மிகவும் ஆழமானது. ஆகையால் பரமன் மிகவும் வருந்தி, "ஐயோ! கோடரி ஏரியில் விழுந்து விட்டதே! இனி நமது குடும்பத்

துக்குச் சாப்பாட்டுக்கு வழியில்லாது போய்விட்டதே. வேறு கோடரி வாங்கவும் வழியில்லையே. என்ன செய்வேன்'' என்று கூறி அழுதுகொண்டிருந்தான். அவனது வருத்தத்தைக் கண்டு இரங்கி, அந்தக் காட்டில் இருந்த **வனதேவதை**, அவன் முன் தோன்றி "அப்பா! ஏன் அழுகிறாய்?'' என்று கேட்டது. அதற்குப் பரமன், "தாயே! என்னுடைய கோடரி இந்த ஏரியில் விழுந்து விட்டது. என் பிழைப்புக்கு ஆதாரமாய் இருந்த கோடரி போய்விட்டதால் அழுகிறேன்'' என்றான்.



இதைக் கேட்ட வனதேவதை உடனே ஏரியில் மூழ்கி, ஒரு தங்கக் கோடரியைக் கொண்டுவந்து காட்டி, "அப்பா, இதுவா உன் கோடரி?'' என்று கேட்டது. பரமன், 'அம்மணி! அம்மாதிரிக்கோடரி நான் கனவிலும் கண்டதில்லை. இது என்னுடையது அல்ல'' என்றான். வனதேவதை தண்ணீரில் மறுபடியும் மூழ்கி, ஒரு வெள்ளிக் கோடரியைக் கொண்டுவந்து காட்ட, பரமன், "இதுவும் எனது அல்ல'' என்றான். பிறகு வனதேவதை மூன்றும்

முறையாகத் தண்ணீரில் மூழ்கி, அவனுடைய இரும்புக் கோடாரியையே கொண்டுவந்து காட்ட, அதைக் கண்டதும் பரமன், "அம்மா! இதுவே எனது கோடரி" என்று கூறி வாங்கிக் கொண்டான். அவனுடைய உண்மையைக் கண்ட வனதேவதை, "அப்பா உனது உண்மையைக் கண்டு சந்தோஷம் அடைந்தேன். உன் நல்ல குணத்துக்காக இந்த இரண்டு கோடரிகளையும் உனக்கே பரிசாகத் தந்தேன். எடுத்துப் போய் சுகமாக வாழ்ந்திரு" என்று கூறி மறைந்தது. பரமனும் தங்கக் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் விற்றுச் சுகமாக வாழ்ந்து வந்தான்.

இந்தச் சங்கதியைக் கேட்ட ராமன் பொறாமை கொண்டு, தானும் அவ்வாறே செய்து பணக்காரன் ஆக எண்ணினன். அவ்வாறே ராமனும் அதே ஏரிக் கரைக்குச் சென்று, விறகு வெட்டுவது போல் பாசாங்கு செய்து, தன் கோடரியை ஏரியில் நழுவவிட்டு, அழத் தொடங்கினன். முன்போலவே வனதேவதையும் அவன் முன் தோன்றி "ஏன் அழுகிறாய்," என்று கேட்டது. அதற்கு ராமன், "நான் விறகு வெட்டிக்கொண்டிருந்தேன். என் கோடரி கை நழுவி ஏரியில் விழுந்து விட்டது" என்று அழுதான்.

அதுகேட்ட வனதேவதை உடனே ஏரியில் மூழ்கி, முன்போலவே ஒரு தங்கக்கோடரியைக் கொண்டுவந்து காட்டி, "இதுதானா உன் கோடரி," என்று கேட்க, பேராசை பிடித்த ராமனே அது தன்னுடையது அல்ல என்று சொல்லவில்லை. "அம்மா! இதுதான் என்னுடைய கோடரி" என்று பொய் கூறி ஆசையோடு அதை வாங்கக் கை நீட்டினன்.

உடனே வனதேவதை அவனை நோக்கி, "அடே! நீ கோடரியை வேண்டுமென்றே ஏரியில் போட்டுவிட்டு, 'தவறிவிட்டது' என்று பொய் கூறினாய். இப்பொழுது

இந்தத் தங்கக் கோடரி உன்னுடையது என்று பேராசையுடன் வாங்கக் கை நீட்டினாய். நீ பெரும் பொய்யன்; பேராசைக்காரன். ஆகையால் உனக்கு உன்னுடைய இரும்புக் கோடரியும் கிடைக்காது; போய்விடு'' என்று கூறி மறைந்து விட்டது. ராமனும் தன் பழைய கோடரியையும் இழந்துவிட்டு, வீட்டுக்குத் திரும்பினான். இவ்வாறு அவன் பேராசைப் பட்டதனால், அவன் ஆயுள் முழுவதும் உணவுக்கு வருத்தப்பட்டுச் சம்பாதிக்கும்படி நேரிட்டது. அதிக ஆசைப்படாத பரமனோ தன் ஆயுள் முழுவதும் சந்தோஷமாக வாழ்ந்தான்.

இக்கதையினால் பேராசை கொண்டவர் தம் கையில் உள்ள பொருளையும் இழந்து கஷ்டப்படுவர் என்பது நன்கு விளங்குகின்றது.

12. தாஜ்மஹால்

உலகத்தில் உள்ள அதிசயங்கள் ஏழு. அவற்றுள் ஒன்று நமது இந்தியாவில் இருக்கிறது. அதுதான் **தாஜ் மஹால்** என்னும் அழகிய கட்டடம். அது **ஆக்ரா** என்னும் பட்டணத்திலே **யமுனை** நதிக்கரையில் கட்டப்பட்டு விளங்குகின்றது. இதன் சரித்திரம் பின்வருமாறு:—

நமது தேசத்தைச் சிலகாலம் மொகலாயர் ஆண்டு வந்தனர். அவர்களுள் முக்கியமானவர் **அக்பர்** சக்கரவர்த்தி. அவருக்குப்பின் அவரது குமாரர் **ஜஹாங்கீர்** பட்டத்துக்கு வந்தார். ஜஹாங்கீர் சக்கரவர்த்தியினுடைய குமாரராகிய **ஷாஜஹான்** சக்கரவர்த்திதான் தாஜ்மஹால் கட்டியவர். மொகலாயச் சக்கரவர்த்திகளுக்கு **டில்லியி லும்**, ஆக்ராவிலும், அரண்மனைகள் உண்டு. ஜஹாங்கீர் காலம் முதல் ஆக்ரா அரண்மனையில் வருஷத்திற்கு ஒரு முறை ஒரு சந்தை கூடும். அச்சந்தையில் பெரிய பிரபுக்கள் வம்சத்திலும் ராஜ வம்சத்திலும் உள்ள சீமாட்டிகள், பல விநோதமான பொருள்களை விற்பதற்கு வைத்துக்

கொண்டிருப்பார்கள். சக்கரவர்த்தி, மந்திரி, சமஸ்தானப் பிரபுக்கள். தனிகர்கள் முதலானவர்கள் அச்சந்தைக்கு வந்து, சீமாட்டிகள் கூறும் விலை கொடுத்து, அவ் விநோதப் பொருள்களை வாங்குவார்கள்.

ஒரு சமயம் ஷாஜஹான் அச்சந்தைக்குச் சென்றிருந்தார். அப்போது அங்கு ஒரு பெண் கற்கண்டுத் துண்டு ஒன்றை விற்பதற்கு வைத்துக் கொண்டிருந்தாள். சக்கரவர்த்தி அவளிடம் சென்று, அதன் விலையைக் கேட்டார். அதற்கு அவள் அது விலை மதிக்க முடியாத வைர



மென்றும் அதன் விலை கோடி ரூபாய் என்றும் கூறினாள். உடனே சக்கரவர்த்தி கோடி ரூபாய் கொடுத்து, அக் கற்கண்டுத் துண்டை வாங்கிக்கொண்டார். அழகில் சிறந்த அப்பெண்ணையும் தாமே கலியாணம் செய்துகொண்டார். கலியாணம் செய்து கொண்டபின், அப்பெண்ணுக்கு **மும்தாஜ்மஹால்** என்று பெயரிட்டார். மும்தாஜ்மஹால் என்றால், **அரண்மனையில் சிறந்தவள்** என்று பொருள். மும்தாஜ்மஹால் மிகவும் அழகு வாய்ந்தவள். ஷாஜஹான் அவளைத் தன் உயிரினும் அதிகமாக நேசித்து வந்தார்.

இவ்வாறு வாழ்ந்து வரும்போது, திடீரென மும்தாஜ் மஹால் வியாதியால் பீடிக்கப்பட்டாள். எவ்வளவோ செலவு செய்து வைத்தியம் செய்தும், வியாதி குணமடைய வில்லை. அச்சமயம் மும்தாஜ் ஷாஜஹானை இரண்டு வரங்கள் கேட்டாள். அவை:—1. தான் இறந்த பிறகு சக்கரவர்த்தி வேறொரு ஸ்திரீயையும் கலியாணம் செய்து கொள்ளக் கூடாது. 2. தன்னைப் புதைத்த இடத்தின் மேல் ஒரு கோரி கட்டவேண்டும் என்பவைகளே. சக்கரவர்த்தியும் அவ்வாறே வாக்களித்தார். சில நாளில் மும்தாஜ்மஹாலும் இறந்தாள். சக்கரவர்த்தியும் அவளை ஆக்ரா நகரத்தில் யமுனை நதிக்கரையில் புதைத்து, அதன் மேல் உலகப் பிரசித்திப் பெற்ற தாஜ்மஹால் என்னும் சிறந்த கட்டடத்தைக் கட்டினர். வாக்களித்தபடியே அவர் வேறொரு ஸ்திரீயையும் கலியாணம் செய்துகொள்ளாமலே இருந்தார்.

தாஜ்மஹாலைப் போல் சிறந்த அழகுள்ள கட்டடம் இவ்வுலகில் இல்லையென்று யாவரும் சொல்லுகிறார்கள். முன் கூறியவாறே இது யமுனை நதிக்கரையில் பெரியதோர் சோலையின் நடுவே அமைக்கப்பட்டுள்ளது. முழுதும் சலவைக் கற்களால் கட்டப்பட்டது. விலை உயர்ந்த ரத்தினங்கள் பதிக்கப் பட்டிருக்கின்றன. தாஜ்மஹாலின் முக்கிய கோரி 186 சதுர அடி விஸ்தீரணம் உள்ளது. கட்டடத்தின் மேலே பெரிய அழகிய சிகரம் உண்டு. 18½ அடி உயரமுள்ள ஒரு மேடையின் நான்கு மூலைகளிலும் நான்கு உயர்ந்த ஸ்தூபிகள் உண்டு.

இதன் வாயில்களெல்லாம் வில் வளைவு வாயில்களே. வாயில்களின் வளைவுகளிலும், மேல் மச்சு, சுவர் ஜன்னல் முதலிய பல இடங்களிலும், இயற்கை விநோதத்தை அறிவிக்கும் செடி, கொடி, புஷ்பம் முதலியவை சலவைக் கற்களாலேயே சித்தரிக்கப்பட்டிருக்கும். இக்கட்டடத்தின் நடுவில் ஓர் அஷ்ட கோணச் சலவைக் கல் மண்டபம்

இருக்கிறது. இம் மண்டபத்தில்தான் மும்தாஜ்மஹாலும் ஷாஜஹானும், அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர். அதன் மேற்புறத்தில் தங்கம் இழைத்த இரண்டு சிகரங்களும், ஒவ்வொரு கோணத்திலும் ஒரு சிகரமும் இருக்கின்றன. இம் மண்டபத்தின் சுவற்றில் ரத்தினங்கள் இழைக்கப்பட்டிருப்பதோடு குரான் என்னும் முகமதிய வேத வாக்கியங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன. மண்டபத்தில் தூப தீபங்கள் காட்டவும், அலங்காரங்கள் செய்யவும், குரானை ஓதவும் ஒரு முகமதிய குரு இருக்கிறார்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த இத் தாஜ்மஹால் கட்டுவதற்கு முப்பது வருஷகாலமும், முப்பது லக்ஷ ரூபாய்களும் செலவழிந்தன. இது முழுவதும் நமது தேசத்துச் சிற்பசாஸ்திரிகளாலேயே கட்டப்பட்டது. அழகிய மலர்ச் சோலையின் நடுவிலும், யமுனை ஆற்றங்கரையிலும் சிறந்து விளங்கும் தாஜ்மஹால் பார்ப்பதற்குத் தேவலோகம் போலவே தோன்றும். தவிரவும் இது நமது தேசச் சிற்ப சாஸ்திரிகளின் வல்லமையை நன்கு நிரூபிக்கும் ஒரு **சிற்ப சாஸ்திர பொக்கிஷம்** என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

13. புத்தியும் வித்தையும்

பலவிதமான வித்தைகளைக் கற்றால் மட்டும் பிரயோஜனமில்லை. அதற்குத் தகுந்தாற்போல் புத்தியும் இருக்க வேண்டும். சிலர் தமக்குப் பாடமாக உள்ள புத்தகங்களைப் படிப்பதைத் தவர வேறு காரியத்தைக் கவனிப்பதில்லை. கேவலம் **புத்தகப் புழுவாக** எப்பொழுதும் புத்தகத்தையே படிப்பதால் நன்மையே இல்லை. அதனால் தேக சுகம் கெடும். தவிரவும் ‘இது நல்லது,’ ‘இது கெட்டது’ என்று பகுத்தறியக்கூடிய சக்தியும் இல்லாது போய்விடும். ஆகையால் நன்றாய்ப் படிப்பதுடன், உலகத்தில் உள்ள பலவிதப் பிராணிகளிடமும் தகுந்தபடி பழகுவதற்கு ஏற்ற புத்தியும் அடைதல் வேண்டும்.

வித்தை மட்டும் இருந்தால் பிரயோசனம் இல்லை. புத்தியும் வேண்டும்.

உதயபுரம் என்ற ஊரில் நான்கு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் நால்வரும் கல்வி கற்றுக் கொள்வதற்காக **ஜெயபுரம்** என்ற ஊருக்குச் சென்றார்கள். அங்கே அவர்கள் ஒரு குருவை அடைந்து, பல வித்தைகளைப் பயின்று வந்தார்கள். அவர்களில் கடைசி சகோதரனான **சுபுத்தி** என்பவனுக்கு வித்தை கற்றுக்கொள்வதில் சிறிதும் ஆவலே இல்லை. ஆனால் அவனுக்கு உலக அனுபவமும், நல்ல சாமார்த்தியமும் ஏற்பட்டது. மற்ற மூவரும் எப்பொழுதும் வித்தை கற்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு வித்தையைத் தவிர வேறு ஒரு விஷயமும் தெரியவில்லை. அவர்கள் சுபுத்தியை மூடன் என்று எண்ணி, வெறுத்து வந்தார்கள்.

அவ்வாறு நான்கு வருஷங்களில் அவர்கள் படிப்பு முடிவடைந்தது. மூத்தவர்களான மூவரும் சகல வித்தைகளிலும் வல்லவர்களானார்கள். சுபுத்தியும் புத்திசாலியாகவும், படிப்பில்லாதவனாகவும் இருந்தான். அவர்கள் நால்வரும் குருவினிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு. தங்கள் ஊரை நோக்கிப் புறப்பட்டார்கள். வழியில் **ராஜபுரி** என்ற பட்டணம் இருந்தது. அப்பொழுது மூத்தவன், 'சகோதரர்களே! இன்னும் கொஞ்ச தூரத்தில் ராஜபுரி என்ற நகரம் இருக்கிறது. அதை ஆளும் அரசன் கல்வியில் வல்லவர்களுக்குத் தகுந்த பரிசு அளிக்கிறானும். நாமும் அங்கே சென்று பரிசு பெற்று வருவோம். ஆனால் நம்முள் சுபத்தி மிகவும் மூடன். ஆகையால் அவனை இங்கேயே விட்டுவிட்டு நாம் மூவரும் செல்வோம்' என்றான்.

மூன்றாம் சகோதரன், "அண்ணன்மார்களே! படிக்காத முட்டாளாய் இருந்தபோதிலும், சுபுத்தி நமது கூடப் பிறந்தவன் தானே. அவனையும் கூட்டிக்கொண்டே

செல்வோம்'' என்று கூறினன். மற்றவர்களும் இதற்குச் சம்மதித்தனர். பிறகு நால்வரும் ராஜபுரியை நோக்கிப் புறப்பட்டார்கள். போகும்பொழுது அவர்கள் ஒரு காட்டின் வழியாய்ச் செல்ல நேர்ந்தது. அக்காட்டின் நடுவில் ஒரு இடத்தில் சில எலும்புகள் சிதறிக் கிடந்தன. அதைக் கண்டதும் மூத்தவன், "தம்பிமார்களே! நமது வித்தையைப் பரீக்ஷை செய்ய ஒரு நல்ல தருணம் கிடைத்திருக்கிறது. அத்தருணத்தைக் கைவிடக்கூடாது.

இதோ, ஒரு இறந்த புலியின் எலும்புகள் கிடக்கின்றன. நம்மவருள் ஒருவன் இந்த எலும்புகளை ஒழுங்காக வைக்கட்டும். மற்றொருவன் இதற்குத் தோலும் சதையும் உண்டாக்கட்டும். நான் இதற்கு உயிர் கொடுக்கிறேன்'' என்றான்.

இதைக்கேட்ட சுபுத்தி, "அண்ணன்மார்களே! தயவுசெய்து நீங்கள் செய்யும் காரியத்தை யோசித்துச் செய்யுங்கள். இறந்த புலியை நீங்கள் உயிர்கொடுத்து எழுப்பினல், அது நம்மையே முதலில் கொன்றுவிடும். ஆகையால் இந்தக் காரியத்தைச் செய்யவேண்டாம்''

என்று வேண்டினன். அப்போது மற்றொரு சகோதரன், "அடே! அற்பப் பதரே! வித்தை கற்காத முழுமூடனாகிய நீயா எங்களுக்குப் புத்தி சொல்லுகிறாய்? அண்ணன் கூறியபடி உன்னை விட்டுவிட்டு வந்திருக்க வேண்டும்" என்று கோபத்துடன் கூறினன். அதற்கு சுபுத்தி, "சரி! நீங்கள் எப்படியும் செய்து கொள்ளுங்கள். தயவு செய்து நான் மரத்தின்மேல் ஏறிக்கொள்ளும்வரை பொறுங்கள். பிறகு உங்கள் வித்தைகளைப் பரீக்ஷித்து, பலனை அடையுங்கள்" என்று கூறி, ஒரு பெரிய மரத்தின் மேல் ஏறிக் கொண்டான்.

சுபுத்தி மரத்தின்மேல் ஏறிக்கொண்டபின், சகோதரரில் ஒருவன் எலும்புகளை ஒழுங்காய் அடுக்கினன். இன்னொருவன் தோலும் சதையும் உண்டாக்கினன். மூன்றாவது சகோதரன் புலிக்கு உயிர் கொடுத்தான். உயிர் பெற்று எழுந்த புலியோ, அம்மூவர் மேலும் பாய்ந்து, அவர்களைக் கொன்று தூக்கிக்கொண்டு, காட்டிற்குள் ஓடிவிட்டது. புலி ஓடி வெகுநேரம் ஆனபிறகு, சுபுத்தி மரத்திலிருந்து இறங்கி வீட்டுக்குச் சென்றான். ஆகையால் வித்தை இருந்தால் மாத்திரம் பிரயோசனம் இல்லை. சமயத்திற்குத் தகுந்த புத்தியும் வேண்டும்.

14. சர்க்கரை

சர்க்கரை எல்லோருக்கும் தெரிந்த வஸ்து. அது மிகவும் இனிமையானது. உணவுக்கு முக்கியமாய் வேண்டியது. சர்க்கரையில் பலவிதங்கள் உண்டு. அவை பழுப்புச் சர்க்கரை, வெள்ளைச் சர்க்கரை, மணல் சர்க்கரை, குழைவு சர்க்கரை என்பனவாம். எல்லா வகைகளும் தித்திப்பாகவே இருக்கும். பிள்ளைகளே! நீங்கள் சர்க்கரையைத் தின்று பார்த்திருக்கிறீர்களா?

சர்க்கரை முக்கியமாய்க் கரும்பின் சாற்றிலிருந்தே செய்யப்பட்டு வந்தது. ஆனல் ஐரோப்பாவில் பீட் என்

னும் ஒரு வகைக் கிழங்கிலிருந்தும், வட அமெரிக்காவில் **சர்க்கரை மரம்** என்னும் மரத்தின் சாற்றிலிருந்தும் சர்க்கரை செய்யப்படுகின்றது. நம் இந்தியாவிலும், சைனவிலும் சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே கரும்பு இருந்ததாகத் தெரிகிறது. இந்தியாவிலிருந்து தான் மற்ற தேசங்களுக்குக் கொண்டு போகப்பட்டது. கரும்பு உஷ்ணதேசங்களிலேயே பயிராகின்றது.

கரும்பில் செங்கரும்பு, வெண் கரும்பு, நாமக் கரும்பு என்று பலவிதங்கள் உண்டு. இவற்றில் செங்கரும்பே



மிகவும் தித்திப்பானது. கரும்பு ஆறு அடி முதல் பன்னிரண்டு அடி உயரம் வரை வளரும். கரும்பில் கணுக்கள் உண்டு. அது ஒரு அங்குலம் முதல், இரண்டு அங்குலம் வரை பருமன் உள்ளது. கரும்பு விதையிலிருந்து உண்டாவதில்லை. ஆனல் கருப்பங் கழியைத் துண்டு துண்டாய் நறுக்கிப் பூமியில் நட்டுப் பயிராக்குவார்கள். நட்ட ஒரு வருஷத்திற்குள் அது நன்ருய் வளர்ந்துவிடும். கரும்பின் நுனியில் பச்சையான நீண்ட இலைகள் உண்டு.

அந்தப் பாகத்தைக் கொழுத்தாடை என்று சொல்வது உண்டு. கரும்பின் அடிப்பாகம் மிகவும் இனிப்பாகவும், கொழுத்தாடைப் பாகம் சற்று உப்பாகவும் இருக்கும்.

முற்றிய கருப்பங் கழிகளைத் துண்டுகளாய் நறுக்கி, பின்பு அவற்றை கரும்பு ஆலைகளில் கொடுத்து, சாறு பிழிவார்கள். கரும்பு ஆலை என்பது இரும்பு உருளைகள் உள்ள ஒரு யந்திரம். இந்த ஆலையை இருமாடுகள் இழுத்துக்கொண்டே, சுற்றிச் சுற்றி வரும். ஆலையின் அடியில் பெரிய பாண்டம் வைத்திருப்பார்கள். ஆலை சுற்றும் பொழுது, ஒருவன் கரும்புத் துண்டுகளை இரும்பு உருளைகளுக்கு இடையில் கொடுத்துக் கொண்டே இருப்பான். இரும்பு உருளைகள் அத் துண்டுகளை நசுக்கி, சாற்றைப் பிழிந்துவிடும். பிழியப்படும் சாறு முழுவதும் கீழே வைக்கப்பட்டுள்ள பெரிய பாண்டத்தில் விழும்.



இவ்வாறு எடுக்கப்படும் சாற்றையெல்லாம் ஈயம்பூசிய பெரிய கொப்பரையில் விட்டு, அடுப்பின் மேல் வைத்துக் காய்ச்சுவார்கள். காய்ச்சும்போது சிறிது சிறிதாகச் சுண்ணாம்பு நீர் சேர்ப்பார்கள். அவ்வாறு சேர்த்தால், சாற்றில் உள்ள அழுக்கெல்லாம் நுரையாக மேலே வரும். இவ்வழுக்கு நுரையை அப்போதைக் கப்போது நீண்ட கரண்டிகளால் எடுத்து வெளியே போடுவார்கள். கொப்பரையில் உள்ள சாறு, நன்ருய்க் காய்ந்தபின் பாகு ஆகும். இப்பாகை நன்ருய்க் காய்ச்சி மரத்தொட்டிகளிலும், மர அச்சுகளிலும் ஆற வைப்பார்கள். ஆறிய பிறகு வெல்லமாக மாறும். அச்சுகளில் ஊற்றியது, அச்சு வெல்லமென்றும், தொட்டிகளில் ஊற்றியது உருண்டை வெல்லமென்றும் சொல்லப்படும்.

இந்தப் பாகை ஆறவிடாமல் நன்றாய்க் காய்ச்சி ஆறவைத்துக்கழிகளால் தட்டி உடைத்தால், **பழுப்புச்சர்க்கரை** ஆகும்.

இப்பழுப்புச் சர்க்கரையைக் கொதிக்கும் தண்ணீரில் கரைத்து, கம்பளிகளில் ஊற்றிப் பலமுறை வடிகட்டுவார்கள். பிறகு மிருகங்களின் எலும்பைச் சுட்டெரித்த கரிகளின்மேல் ஊற்றி வடி கட்டுவார்கள். அசுத்தமெல்லாம் கரியில் ஒட்டிக்கொள்ளும். சர்க்கரைத் தண்ணீர் சுத்தமாகிவிடும். அந்த நீரை மறுபடியும் ஈயம் பூசிய பாத்திரத்தில் ஊற்றிக் காய்ச்சுவார்கள். நன்றாய்க் காய்ச்சி ஆறவைத்தால் இது **வெள்ளைச் சர்க்கரை** ஆகும். வெள்ளைச் சர்க்கரையிலிருந்து **கற்கண்டு** காய்ச்சப்படுகிறது.

நம் இந்தியாவில் தென்னை, பனை, ஈந்து முதலியவற்றின் சாறுகளிலிருந்தும் வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலியவை செய்கிறார்கள். சென்னை ராஜதானியில் **அஷ்டகிராமம், பீமன் பட்டணம், அஸ்கா, ராஜமகேந்திரம்** முதலிய பல இடங்களில் சர்க்கரை செய்கிறார்கள். வெல்லம் பெரும்பாலும் நமது ராஜதானி முழுவதும் செய்கிறார்கள். பனைவெல்லமும், பனங்கற்கண்டும் திருநெல்வேலிப் பக்கத்தில் மிகவும் விசேஷம்.

இனி பீட் கிழங்குகளிலிருந்து எப்படிச் சர்க்கரை செய்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளுவோம். இந்தக் கிழங்கின் விதைகள் மண்ணில் விதைக்கப்பட்டுப் பயிர் செய்யப்படுகின்றன. கிழங்குகள் முற்றியபின் அவைகளைத் தோண்டி எடுத்து இலேசான சிறு துண்டுகளாகச் சீவி அவற்றை வெந்நீரில் போட்டு ஊறவைப்பார்கள். நன்றாய் ஊறிக் கருப்பஞ்சாறுபோல் அந்த நீர் ஏற்பட்டபின் கிழங்குத் துண்டுகளைப் பிழிந்தெடுத்துவிட்டு, அடுப்பில் ஏற்றிக் காய்ச்சி முன் கூறிய முறைப்படியே சர்க்கரை செய்வார்கள்.

சர்க்கரை மரத்தில் பல இடங்களில் வெட்டி அதனின்றும் வடியும் பாலைச் சேகரித்து முன் கூறிய வித

மாகவே அடுப்பில் ஏற்றிக் காய்ச்சிச் சர்க்கரை செய்வார்கள். இம்மரங்கள் வட அமெரிக்காவிலும், இங்கிலாந்து தேசத்திலும் வளர்கின்றன.

சர்க்கரை தேகத்துக்குச் சுகத்தையும் புஷ்டியையும் தரக்கூடியது. முக்கியமாக அது குழந்தைகளின் தேக வளர்ச்சிக்கு இன்றியமையாதது. பெரியோர்களின் தேகத்தில் உள்ள தசைகளின் பலவீனத்தை, சர்க்கரை சரிப்படுத்திவிடும். ஆனல் பெரியோர்கள் சர்க்கரை அதிகமாய் உபயோகிக்கக்கூடாது. சர்க்கரை சேர்ந்த பதார்த்தங்கள் பலநாள் வரை கெடாமல் இருக்கும். இதற்காகவே மேல் நாட்டார் ஊறுகாய்கள் சர்க்கரையிலேயே செய்கிறுர்கள். நம் தேசத்தில் ஊறுகாய்களுக்கு முக்கியமாய் உப்புச் சேர்க்கிறுர்கள். சிலர் சிறிது சர்க்கரை சேர்ப்பதும் உண்டு. சர்க்கரை பலவிதமான பலகாரங்கள் செய்ய உபயோகப்படுகிறது. லேகியம் முதலிய ஔஷதங்களோடும் சேர்க்கப்படும்.

15. தந்தையைக் காத்த சிறுமி

ராமசாமி என்ற ஒருவன் சென்னைப்பட்டினத்தில் இருந்தான். அவனுடைய மனைவி இறந்துவிட்டாள். ஆனல் அவனுக்கு ஒரு பெண் உண்டு. அவள் பெயர் **சுந்தரி**. அவன் ஒரு பஞ்சு ஆலையில் வேலைசெய்து, தன் புத்திரியைக் காப்பாற்றி வந்தான். அவனுக்குக் கிடைக்கும் சிறு தொகையான கூலிப் பணம் அவர்களுடைய செலவுகளுக்குப் போதுமானதாய் இருந்தது.

சுந்தரி மிகவும் அழகிய சிறுமி. தன் தந்தை வேலைக்குச் சென்ற நேரத்தில், வீட்டு வேலைகளைச் சரிவரச் செய்வாள். தந்தை ஆலையிலிருந்து வந்ததும், அவனுக்கு வேண்டிய உபசரணைகள் செய்து, ஆகாரம் அளிப்பாள். தந்தையிடம் மிகுந்த பிரியத்துடன் இருந்து வந்தாள். ராமசாமியும் தன் மகளை நன்ருய்ப்

போஷித்து வந்தான். அவளுக்கு வேண்டிய ஆடை ஆபரணங்கள் வாங்கிக் கொடுப்பான்.

ஒரு நாள் மாலையில் சுந்தரி, ஆகாரம் செய்து வைத்துவிட்டு, தந்தையின் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது தெருவில் ஒரு கிழவி, அழுதுகொண்டு வருவதைக் கண்டாள். அக்கிழவி சுந்தரியை நோக்கி, "அம்மா! நான் உணவு உண்டு நான்கு நாட்கள் ஆயின. எங்கும் ஆகாரம் கிடைக்க



வில்லை. தயவு செய்து எனக்குச் சிறிது ஆகாரம் அளிப் பாயா? இல்லாவிட்டால் நான் இங்கேயே இறக்கவேண் டியதுதான்" என்றாள். இதைக் கேட்ட சுந்தரி மிகவும் இரக்கப்பட்டாள். வீட்டில் இருந்த ஆகாரத்தைக் கிழவிக்குக் கொடுத்துவிட்டால், வேறு ஆகாரம் இல்லை. 'தானும் தந்தையும் பட்டினி கிடக்க வேண்டுமே' என்று யோசித்தாள். ஆனாலும், கிழவியின் நிலைமையைக் கண்ட அவள் மனம் பொறுக்கவில்லை. உடனே இருந்த ஆகாரத்தைக் கிழவிக்குக் கொடுத்து விட்டாள்,

சுந்தரி கொடுத்த ஆகாரத்தைக் கிழவி வயிறார உண்டாள். பிறகு சுந்தரியை நோக்கி, "அம்மா! நீ சுகமாக வாழ்வாய். இன்னும் சில நாட்களில் உங்களுக்குக் கஷ்டம் ஏற்படும். அப்பொழுது நீ தைரியத்துடன் நடந்துகொண்டால் உன் குணத்துக்கும் அழகுக்கும் தகுந்த புருஷன் கிடைப்பான். நீயும் உன் தந்தையும் சுகமாய் வாழ்வீர்கள்" என்று வாழ்த்தித் தன் வழியே சென்றாள்.

சில நாள் சென்றன. ஒரு நாள் இரவு அவர்கள் இருந்த வீடு திடீரெனத் தீப்பற்றிக்கொண்டது. சுந்தரி உடனே எழுந்து வெளியே வந்தாள். அச்சமயம் ராமசாமி வியாதியால் அதிகம் வருந்தியபடியால் வெளியே வரமுடியவில்லை. சுந்தரி அண்டை வீட்டுக்கு ஓடி அங்கிருந்தவர்களை அழைத்து வந்து தன்னுடைய தந்தையை வெளியேற்றிக் காப்பாற்றினாள்.

ராமசாமி வியாதியாய் இருந்ததால் வேலைக்குச்செல்ல முடியவில்லை. அதனால் அவர்கள் பிழைப்புக்கு கஷ்டம் உண்டாயிற்று. இத்துடன் வீடும் எரிந்து போனதால் அவர்கள் இருப்பதற்கு இடமும் இல்லை. ஆகையால் சுந்தரி தன் தந்தையை ஒரு வீட்டுத் திண்ணையில் படுக்க வைத்து உணவு தேடிச் சென்றாள்.

அப்பொழுது வாலிபரான ஒரு பிரபு அத்தெருவின் வழியே சென்றார். சுந்தரி அவரைக்கண்டதும், "ஐயா, என் தந்தை மிகவும் வியாதியாய் இருக்கிறார். அவருக்கு வைத்தியம் செய்யவும் உணவுக்கு வேண்டிய பணமும் இல்லாமல் கஷ்டப்படுகிறேன். ஆகையால் தாங்கள் தயவு செய்து ஏதாவது பணம் கொடுத்து உதவ வேண்டும்" என்று வேண்டினாள். அதைக் கேட்ட பிரபு, அவள் சொல்வதை நம்பாமல், "உன் தந்தை இருக்கும் இடத்தைக் காட்டு" என்றார். அவ்வாறே இருவரும் ராமசாமி படுத்திருக்கும் இடத்திற்குச் சென்றார்கள்.

ராமசாமி இருக்கும் நிலைமையைக் கண்ட பிரபு மனம் இரங்கி, அவர்களுக்கு வேண்டிய பணம் அளித்தார். அப்பிரபுவும் அவர்களை அடிக்கடி கவனித்து வந்தார். பிறகு சுந்தரியின் அழகையும் குணத்தையும் கண்டு அவளை அவரே கலியாணம் செய்துகொண்டார். சுந்தரியும் ராமசாமியும் சுகமாய் வாழ்ந்து வந்தார்கள்.

எவ்வளவு கஷ்டம் வந்தபோதிலும் தைரியத்தைக் கைவிடாது, தன் தந்தையைக் காத்த சிறுமி நல்ல நிலைமையை அடைந்து சுகமாய் வாழ்ந்து வந்தாள். பிள்ளைகளே! இதுபோலவே நீங்களும், கஷ்டகாலத்திலும் தாய் தந்தையர்களைக் காப்பாற்ற வேண்டியது உங்கள் கடமையாகும்.

16. சுகாதார விதிகள்

1. பதமுள்ள உணவும் மிதமிஞ்சி உண்ணேல்.
2. வேகா தாயின் ஆகா தென்றறி.
3. தினந்தினம் அழுக்குத் தேய்த்துக் குளிக்க.
4. தேக சௌக்கியமே சிறந்த பாக்கியம்.
5. முகத்தைப் போர்வையால் மூடி உறங்கேல்.
6. காற்று நுழையா வீட்டில் வசியேல்.
7. கொதிக்கக் காய்ச்சிக் குளிர்ந்த நீர் குடிக்க.
8. ஈயிடம் பெற்றால் நோயிடம் பெறுமே.
9. எலிக்கிடம் கொடுத்தால் நலிக்கிடம் கொடுத்தலாம்.
10. இருட்டும் அழுக்கும் பெருக்கும் நோயை.
11. அழுகிய பொருள்களை அப்புறப்படுத்துக.
12. குப்பையைச் சேர்த்துக் குழித்து மூடுக.
13. மூட்டையும் கொசுவும் கேட்டையே விளைக்கும்.
14. நோயுடையார் பால் நோயிலார் நெருங்கிப்
    பழகலா காதெனப் பகர்ந்தனர் பெரியோர்.
15. தொத்துநோ யுடையோர் தொட்ட பொருள் உடை
    துணிகள் எதையுமே தொடலு மாகாதே.
16. விரும்பித் தின்னும் அரும்பழம் ஆயினும்
    கனியா தாயிற் கைவிட் டொழிக்க.

17. ஒட்டுநோய் தொத்துநோய் உள்ள காலங்களில்
இரவில் தெருவில் திரிதலாகாது.

18. செருப்பணியாமல் தெருவிலும் வெளியிலும்
நடந்திடிற் பிணிகளுக் கிடங்கொடுத் திடுவீர்.

19. முன்னிரா வுறங்கிப் பின்னிரா விழித்துக்
காலையி லெழுதல் கடனெனக் கொள்க.

20. அழுக்கே நோய்களுக் கன்னையா மென்றறிந்(து)
அழுக்கணுகா நெறி வழக்கப் படுத்துக.

17. மன்னனும் மந்திரியும்

மகத தேசத்தை மகிபாலன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனுடைய மந்திரியின் பெயர் மதியூகி. ராஜ்ய



விஷயங்களில் அரசன் மதியூகியின் சொற்படியே நடந்து வந்தான். ஆனாலும் மதியூகியோ, அரசனுக்குக் கஷ்டம் வந்த சமயத்திலும் இதுவும் ஒரு நன்மைக்கே என்று கூறிக்கொண்டே இருந்தான்.

ஒருநாள் சில ஜனங்கள் அரச சபைக்கு வந்து, "காட்டு மிருகங்களின் தொந்தரவு பொறுக்க முடிய

வில்லை'' என்று முறையிட்டார்கள். ஆகவே அரசன் அம்மிருகங்களைக் கொல்வதற்காக மறுநாள் வேட்டைக்குப் புறப்படத் தீர்மானித்தான். அச்சமயம் அரசனைக் காணவந்த ஒருவர், மாம்பழம் ஒன்றை அரசனுக்குக் கொடுத்துச் சென்றார். அப்பழத்தை உடனே தின்ன ஆவல்கொண்ட அரசன், ஒரு கத்தியால் அதைச் சீவ ஆரம்பித்தான். ஆனால் பழத்தைச் சீவும்பொழுது, கத்தி அரசனுடைய இடது கைச் சுண்டு விரலைத் துண்டித்து விட்டது. உடனே அரசன் மந்திரியை அழைத்து கையைக் காட்டினான். அதைக் கண்ட மந்திரி கொஞ்சமேனும் மனவருத்தம் காண்பிக்காமல், வழக்கம் போல், "இதுவும் ஒரு நன்மைக்கே'' என்றான். இது கேட்ட அரசன் கோபங்கொண்டு, மந்திரியைச் சிறையில் அடைக்க உத்தரவிட்டான். அதற்கும் மந்திரி, "இதுவும் ஒரு நன்மைக்கே'' என்றான். சேவகர்கள் அரசன் உத்தரவுப்படி மந்திரியைச் சிறையில் அடைத்துவிட்டார்கள்.

அரசன் எப்பொழுதும் மந்திரி இல்லாமல் வெளியே புறப்படுவதே இல்லை. வேட்டைக்கு மந்திரி இல்லாமல் போகலாமா என்று ஆலோசித்தான். மந்திரியின்மேல் அரசனுக்கு இருந்த கோபம் ஆறவில்லையாகையால், தன் வீரர்களுடன் மந்திரி இல்லாமலே வேட்டைக்குச் சென்றான். காட்டில் வெகுநேரம் வேட்டையாடியபின், அரசன் தன் வீரர்களை விட்டுப் பிரிய நேர்ந்தது. வழி தெரியாமல் அரசன் காட்டிலேயே குதிரையுடன் அலைந்து திரிந்து மிகவும் களைத்துப் போய், குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு, மர நிழலில் படுத்து உறங்கிவிட்டான்.

அக்காட்டில் சில திருடர்கள் ஒன்று சேர்ந்து வசித்து வந்தார்கள். அவர்கள் வருஷத்துக்கு ஒரு முறை, மனிதன் ஒருவனைத் தங்கள் குல தெய்வமாகிய காளிக்குப் பலிகொடுப்பது வழக்கம். அன்று அவர்கள் பலி கொடுக்க வேண்டிய தினம். ஆனால் சாயங்காலம்

வரை பலிக்கு மனிதன் அகப்படவில்லை. அக்காடு முழுவதும் அவர்கள் தேடி அலைந்தார்கள். கடைசியில் அரசன் படுத்திருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அரசனைக் கட்டிப் பிடித்து, காளிகோவில் பூஜை செய்பவனிடம் கொண்டுபோனர்கள்.

பலி கொடுக்கப்படும் மனிதனுடைய தேகத்தில் எந்தப் பாகத்திலும் சிறிதுகூடக் குறைவு இருக்கக் கூடாது. ஆகையால் பலி கொடுக்கும் மனிதனை, பூஜை செய்பவன் நன்ருய்ப் பரிசோதிப்பான். அதன் பின்னே பலிகொடுப்பது வழக்கம். அரசனையும் அவ்வாறே அன்றையதினம் பரிசோதித்தான். பரிசோதிக்கும்பொழுது, அரசனுக்கு ஒரு கையில் சுண்டுவிரல் இல்லையென்று தெரிந்ததும் அரசனை விடுவித்துவிட்டார்கள். அரசனும் சந்தோஷித்து, "ஆகா! சுண்டு விரல் இருந்திருந்தால் என்னைப் பலி கொடுத்திருப்பார்களே! ஆகையால் மந்திரி கூறியபடி என் சுண்டுவிரல் வெட்டுப்பட்டதும் ஒரு நன்மைக்குத்தான்" என்று எண்ணித் தன் நாட்டை அடைந்தான்.

அடைந்ததும் மந்திரியை விடுவித்துக்கொண்டு வரும்படி கட்டளையிட்டான். சேவகர்கள் அவ்வாறே மந்திரியை அழைத்து வந்தார்கள். உடனே அரசன் மந்திரியிடம் நடந்ததைக் கூறி, "மந்திரீ! நான் விரலை வெட்டிக்கொண்டபொழுது நீ கூறியது உண்மை ஆயிற்று. ஆனல் நான் உன்னைச் சிறையில் அடைத்தபொழுது, 'இதுவும் ஒரு நன்மைக்கே' என்று கூறினயே, அது உண்மையாகவில்லையே?" என்று கேட்டான்.

அது கேட்ட மந்திரி, "அரசே! தாங்கள் என்னைச் சிறையில் அடைக்காவிட்டால், நானும் உங்களுடன் காட்டுக்கு வேட்டையாட அவசியம் வந்திருப்பேன். அங்கு மற்ற வீரர்கள் பிரிந்தபோதிலும், நான் உங்களைப் பிரியாமல் உங்களுடனே இருந்திருப்பேன். அப்பொழுது திரு

டர்கள் என்னையும் பிடித்துக்கொண்டு போயிருப்பார்கள். சுண்டு விரல் இல்லாததற்காக உங்களை விட்டுவிட்டபோதிலும், தேகத்தில் ஒரு குறைவும் இல்லாத என்னைப் பலி கொடுத்திருப்பார்கள் அல்லவா? ஆகையால் என்னைச் சிறையில் அடைத்ததும் ஒரு நன்மைக்குத்தான்" என்று கூறினன்.

அரசன் இது கேட்டு மிகவும் சந்தோஷம் அடைந்து, அன்று முதல் மந்திரி சொல் சற்றேனும் தவறாமல் நடந்து வந்தான். அதனல் அவன் ராஜ்யமும் நன்மை அடைந்தது.

மந்திரிக் கழகு வரும் பொருள் உரைத்தல்

18. உப்பு

நமது தினசரி ஆகாரத்தில் மிகவும் முக்கியமாய் இருப்பது உப்பு. அது பிராணிகளுக்கு இன்றியமையாதது. மனிதருக்குச் சர்க்கரையைக் காட்டிலும் உப்பே மிகவும் அவசியமானது. நாம் உண்ணும் எந்த உணவிலும் ஓர் அளவு உப்புச் சத்து சேர்ந்திருக்கிறது. தண்ணீர், இலை, தழை, காய், கனி முதலிய பலவித பதார்த்தங்களில் உள்ள உப்புச் சத்துக்கள் பலவகைப்படும். நாம் ஆகாரத்தில் சேர்க்கின்ற உப்பு சோடியம் க்ளோரைட் எனப்படும்.

கடல் நீரில் இந்த உப்பு ஏராளமாக இருக்கின்றது. தவிரவும் பூமியில் படிந்துள்ள உப்பு ஆறு, ஓடை முதலியவைகளால் கடலில் கொண்டுபோய்ச் சேர்க்கப்படுகிறது. ஆகையால் கடல் நீரில் உப்பு ஏராளமாக கிடைக்கிறது. சில இடங்களில் உள்ள கிணற்று நீர் உப்பாக இருப்பதை நாம் காண்கிறோம். இக்கிணறுகள் தோண்டப்படும் இடத்து மண்ணில் அளவுக்கு மிஞ்சி உப்புச் சத்து இருப்பதாலும், தண்ணீர் உப்பு மண்ணில் ஊறிக் கிணற்றுக்கு வருவதாலும், கிணற்று நீர் உப்பாகவே இருக்கிறது. வண்ணன் உடைவெளுக்க உபயோகிக்கும்

உவர் மண்ணிலும் உப்புக் கலந்திருக்கிறது. சில அருவி நீரிலும், ஆற்று நீரிலும் உப்புச் சேர்ந்துள்ளது. நிலத்தில் உள்ள சுரங்கங்களிலிருந்தும் மலைகளிலிருந்தும் உப்பு எடுப்பது உண்டு. ஆனால் கடல் நீரை வற்ற வைத்து எடுக்கும் உப்பே நல்லது.

உப்பு எடுக்கும் விதங்கள் மூன்று. முதலாவது கடல் நீரிலிருந்து எடுப்பதே முக்கியமானது. கடல்நீரை சிறு வாய்க்கால்கள் மூலம் உப்புச் செய்யப்படும் இடத்திற்குக் கொண்டு போவார்கள். உப்புச் செய்யப்படும் இடத்தைச் சீர் திருத்தி, ஆழமில்லாத சிறு சிறு பாத்திகளாகப் பிரிப்பார்கள். வாய்க்கால்கள் வழியாய் வரும் கடல் நீரை இப்பாத்திகளில், சிறிது சிறிதாக நிரப்புவார்கள். இவ்வாறு பாத்திகளில் உள்ள கடல் நீரெல்லாம் இரண்டு மூன்று நாட்களில், சூரிய வெப்பத்தினால் நீராவியாக மாறிப்போய்விடும். அதில் உள்ள உப்பு, சிறு கற்களாகப் பாத்திகளிலேயே தங்கிவிடும். இவ்வுப்பைத் திரட்டி எடுத்து ஒன்று சேர்ப்பார்கள். இப்படி ஒன்று சேர்க்கப்படும் உப்பைக் குவியல்களாகக் குவித்து வியாபாரிகளுக்கு விற்பார்கள். இவ்வாறு உப்பு செய்யப்படும் இடங்களுக்கு **உப்பளங்கள்** என்று பெயர்.

நமது சென்னை ராஜதானியில் கடற்கரை ஓரமாக அநேக உப்பளங்கள் இருக்கின்றன. எல்லா உப்பளங்களும் நமது அரசாங்கத்தார் வசமே இருக்கின்றன. இதற்காகவே பல உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு **உப்பு இலாகா உத்தியோகஸ்தர்கள்** என்று பெயர். வியாபாரிகள் அரசாங்கத்தாரிடமிருந்து, மொத்தமாக உப்பை வாங்கி, நமக்கு விற்கிறார்கள். இதையே நாம் தினந்தோறும் உபயோகிக்கிறோம். ஆனால் இந்த உப்பு அவ்வளவு சுத்தமானதல்ல. கடல்நீரை அடுப்பில் காய்ச்சிச் செய்யும் உப்பே மிகவும் சுத்தமானது. ஆனால் அவ்வாறு செய்ய, செலவு அதிகமாகும். இவ்வுப்பு வெண்மையாய் மணல் சர்க்கரைபோல் இருக்கும்.

இரண்டாவது, நிலத்திலிருந்தும், மலையிலிருந்தும் உப்பு எடுக்கப்படுகிறது. பூமியில் பெரிய சுரங்கங்கள் வெட்டி, உப்பு எடுக்கிறார்கள். மலைகளில் உள்ள பிளவு களிலும், சரிவுகளிலும் உப்புக் கிடைக்கும். ஆனால் இவ் வுப்பு மண்ணோடும்; வேறு பதார்த்தங்களோடும் கலந் திருக்கும். ஆகையால் உப்பைத் தனியாய்ப் பிரித்துச் சுத்தம் செய்யவேண்டும். இம்மாதிரி உப்புச் சுரங்கங்கள் ஐரோப்பா தேசத்தில் இருக்கின்றன.

மூன்றாவது, கிணறுகளிலும், ஊற்றுகளிலும் உள்ள உப்பு நீரைக் காய்ச்சி உப்பு எடுக்கிறார்கள். பெரிய தொட்டிகளில் இந்த உப்பு நீரை ஊற்றி, அடுப்பில் வைத் துக் காய்ச்சுவார்கள். இப்படி எடுக்கும் உப்பு மிகவும் சுத்தமானது.

நமது தேகத்தின் எல்லாப் பாகத்திலும் உப்புச் சத்து இருக்கிறது. முக்கியமாக எலும்பிலும், ரத்தத்தி லும் உப்பு அதிகமாக உண்டு. நம் உடம்பிலிருந்து வெளி வரும் வியர்வை நீரிலும் உப்பு உண்டு. இம்மாதிரியே எல் லாப் பிராணிகளின் தேகத்திலும் உப்புச் சத்து இருக் கிறது. புல், பூண்டு தழை முதலிய பலவித ஆகாரங் களைச் சாப்பிடுவதால் அவைகளுக்கு உப்புக் கிடைக்கிறது. இப் புல், பூண்டு, தழை முதலியவைகளுக்குத் தண்ணீர் மூலமாய் உப்புச் சத்துக் கிடைக்கிறது. இவ்வுலகில் இயற் கையாய் உள்ள ஒவ்வொன்றிலும் உப்பு இருக்கிறது. உப்பே உயிர்களுக்கு ஆதாரம்.

உப்புச் சேராத எந்தப் பதார்த்தமும் ருசியாய் இராது. உப்புச் சேர்ந்த உணவு தின்பண்டங்கள் முத லியவை மிகவும் ருசியாய் இருக்கும். உணவுப் பொருள் களும், ஊறுகாய்களும் கெடாமலும், அவைகளில் புழுக் கள் வராமலும் காப்பது உப்பே. அதனாலேயே அதிக நாள் இருக்கவேண்டிய பதார்த்தங்களுக்கு உப்பை அவ சியமாய்ச் சேர்க்கிறார்கள். மீன் உண்பவர்களும்,

அவற்றை உப்புக்கண்டம் போட்டு, அதிக நாள் வைத்துக் கொண்டு உண்பர். இதனாலேயே **உப்பில்லாப் பண்டம் குப்பையிலே** என்ற பழமொழி வழங்கி வருகிறது.

நமது தேகத்தில் எவ்வளவு உப்புச் சேருகிறதோ அவ்வளவு பலம் ஏற்படும். ஒட்டகம் உப்பை அதிகமாய்த் தின்பதால்தான், பாலைவனத்தில் பாரமான சுமைகளைச் சுமந்து செல்லுகிறது. ஆகையால் உப்பு அதிகமாகச் சேர்ப்பவர்கள் மிகவும் பலசாலிகளாய் இருப்பார்கள். உப்பு இல்லாவிட்டால் ஒரு உணவுக்கும் ருசியில்லை. ஒவ்வொரு பதார்த்தத்திலும் உப்பு உண்டு. உப்பு இல்லாவிட்டால் உயிர் இல்லை. உப்பு அளித்தவன் உயிர் கொடுத்தவன். இதனால்தான் **உப்பிட்டவரை உள்ளளவும் நினை** என்ற பழமொழி வழங்குகிறது.

19. உப்பும் சர்க்கரையும்

நந்தகோபாலன் என்பவன் ஒரு அரசன். அவனுக்கு மூன்று பெண்கள் உண்டு. ஆனால் பிள்ளை கிடையாது. பெண்களில் மூத்த இருவரும் மிகவும் கர்வம் கொண்டவர்கள். வஞ்சகம் நிறைந்தவர்கள். கடைசிப் பெண்ணான **காமாக்ஷியோ** அடக்கமும் பொறுமையும் அமைந்தவள். புத்தியும் வித்தையும் அவளிடம் நிரம்பியிருந்தன. மூத்த பெண்கள் இருவரும் தங்கள் அகம்பாவத்தினால் காமாக்ஷியை அவமதித்து வந்தார்கள். அவளுடன் பேசுவதும் இல்லை. இதற்காக காமாக்ஷி வருந்துவதும் இல்லை.

ஒரு நாள் நந்தகோபாலன் தன் பெண்கள் மூவரையும் அழைத்து, "புத்திரிகளே! நீங்கள் மூவரும் என்மேல் மிகுந்த அன்புடன் இருக்கிறீர்கள். ஆனால் உங்கள் அன்பு எப்படிப்பட்டது என்று தெரியவில்லை" என்று கூறினான். மூத்தவர்கள் இருவரும் தங்கள் வஞ்சகத்தை வெளியிடாமல், தந்தையை சந்தோஷப்படுத்த எண்ணினார்கள். அதன்படியே மூத்தவள், "தந்தையே! நான் சர்க்கரையை விரும்புவதுபோல் தங்களை விரும்புகிறேன்"

என்றாள். இரண்டாம் புத்திரி, "தந்தையே! நான் கரும்பை விரும்புவதுபோலத் தங்களை விரும்புகிறேன்" என்றாள். ஆனால் காமாக்ஷியோ, "தந்தையே! நான் உப்பை விரும்புவதுபோல தங்களை விரும்புகிறேன்" என்று பணிவுடன் கூறினாள்.

காமாக்ஷி கூறியதின் உட்கருத்து அறியாமல் அரசன் கோபம் கொண்டான். "காமாக்ஷி! உன்னை இத்தனை காலம் அருமையாய் வளர்த்தேன். நீ சிறிதும் நன்றி இல்லாமல் உப்பைப்போல் என்னை விரும்புகிறேன் என்று கூறினாய். உப்பு எவ்வாறு கரிக்குமோ அவ்வாறே நீ என்னை வெறுக்கிறாய் என்று நினைக்கிறேன். ஆகையால் நீ என்னுடைய அன்புக்கு ஏற்றவளல்ல. உடனே என் நாட்டைவிட்டு வெளியே போய்விடு" என்று கூறி அவளை அடித்துத் துரத்திவிட்டான்.

இவ்வாறு துரத்தப்பட்ட அவள் ஒரு மார்க்கம் செல்லுகையில் வழிதவறி, திகைத்து அலைந்து கொண்டிருந்தாள். அச்சமயம் வேட்டையாட வந்த ராஜகுமாரன் ஒருவன் காமாக்ஷியைக் கண்டான். கண்டதும் அவள் யாரென்று விசாரித்தான். காமாக்ஷியும் நடந்ததைக் கூறினாள். உடனே ராஜகுமாரன் அவளைத் தன் நாட்டிற்குக் கூட்டிக்கொண்டு போய் தான் கல்யாணம் செய்கொண்டான்.

மூத்த பெண்கள் இருவம் கூறிய வஞ்சகவார்த்தைகளை உண்மையென நம்பிய நந்தகோபாலன், அவர்களை மிகவும் பிரியத்துடன் கவனித்து வந்தான். இரு ராஜகுமாரர்களுக்கு அவர்களைக் கல்யாணம் செய்துகொடுத்தான். பிறகு தன் ராஜ்யத்தை இரண்டாகப் பகிர்ந்து, அவர்கள் இருவருக்கும் கொடுத்தான். அவன் இப்படி செய்யும் வரை பெண்கள் இருவரும் அவன் மேல் மிகுந்த அன்புடையவர்கள் போல் நடித்து வந்தார்கள். ஆனால் ராஜ்யம் கிடைத்ததும் அவர்கள் நந்தகோபாலனைக் கவ

னிக்கவே இல்லை. தங்கள் புருஷர்களுடன் கூடி, அவ னைக் கொடுமையாய் நடத்தவும் ஆரம்பித்தார்கள்.

இதைக் கண்ட நந்தகோபாலன் தேசயாத்திரை போய் வருவதாகக் கூறி, நாட்டை விட்டுச் சென்றான். செல்லும் வழியில் காமாக்ஷியின் புருஷன் அரசாண்ட ராஜ்யத்தை அடைந்தான். காமாக்ஷியின் புருஷன் நந்தகோபாலனைக் கண்டு உபசரித்துத் தன் அரண்மனைக் குக் கூட்டிச் சென்றான். தன் கடைசி மகள் அங்கு இருப் பது அவனுக்குத் தெரியாது. காமாக்ஷியோ தந்தை வந்ததை அறிந்தவளாய், விருந்துக்கு ஏற்பாடு செய்தாள். நந்தகோபாலன் உண்ண உட்கார்ந்ததும், முழுதும் சர்க் கரையால் செய்யப்பட்ட தித்திப்புப் பண்டங்களே பரி மாறப்பட்டன. சிறிது நேரம் அவைகளை ஆவலுடன் தின்றான். பிறகு அவனால் தித்திப்புப் பண்டங்கள் தின்ன முடியவில்லை. வேறு பதார்த்தங்கள் விரும்பிக் கேட்டான். அப்பொழுதும் தித்திப்புப் பண்டங்களே பரிமாறப்பட்டன. அதையும் அவனால் தின்ன முடிய வில்லை.

முடிவில் அவன் மனம் வருந்தி. "ஐயோ! உப்புப் பண்டங்கள் ஒன்றும் இல்லையா?" என்று கதறினான். அப்பொழுது காமாக்ஷி அங்கு வந்து, "தந்தையே! முன்பு தாங்கள் கரும்பையும், சர்க்கரையும்தானே விரும்பினீர் கள். உப்பை வெறுத்தீர்களே. இப்போது உப்பை ஏன் விரும்புகிறீர்கள்?" என்றாள். இது கேட்ட நந்த கோபாலன் தன் மகளான காமாக்ஷியை அப் பொழுது தான் அறிந்துகொண்டான். உடனே அவன் "காமாக்ஷி! முதலில் நான் விரும்பிய தித்திப்புப் பண்டங் கள் எப்படி இப்பொழுது வெறுப்பாயினவோ அதே மாதிரி என் மூத்த பெண்கள் இருவரும் என் நாட்டைப் பிடுங்கிக்கொண்டு என்னைக் கொடுமையாய் நடத்தி னார்கள். உப்பை இப்போது எவ்வளவு ஆவலுடன்

விரும்புகிறேனே அவ்வளவு பிரியத்துடன் உன்னையும் விரும்புகிறேன்" என்று கூறி வருந்தினன்.

காமாக்ஷியும் அவள் கணவனும் அவனைத் தேற்றினர்கள். பிறகு காமாக்ஷியின் கணவனான அரசன், தன் படைகளுடன் சென்று, நந்தகோபாலனுடைய நாட்டை ஜெயித்து, அவனைத் திரும்பவும் அரசனுக்கினன். நந்தகோபாலனும் காமாக்ஷியும் அவள் கணவனும் சுகமாக வாழ்ந்தனர். மூத்த பெண்களும் அவர்கள் புருஷர்களும்



நாட்டைவிட்டு ஓடிவிட்டார்கள். இக் கதையினல் 'சர்க்கரையைக் காட்டிலும் உப்பே அவசியமானது' என்றும், 'உண்மையான அன்புள்ளவர் வெளியே காட்டிக் கொள்ள மாட்டார்' என்றும் நன்கு விளங்கும்.

20. ஔவையார்

பிள்ளைகளே! நீங்கள் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் படித்திருக்கிறீர்கள் அல்லவா? அவைகளை எழுதியது யார் தெரியுமா? ஔவையார் என்பவர்தான். ஔவை

யார் முன் காலத்தில் நம் தமிழ் நாட்டில் தமிழில் மிகவும் சிறப்படைந்திருந்த ஒரு பெண் புலவர். ஒளவை என்ற பதத்திற்கு, கிழவி என்று பொருள். அவர் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்த கிழவியாதலால் அவருக்கு இப்பெயர் வந்தது. அவருடைய கல்வி அறிவையும், நூல்களையும் புகழாதார் ஒருவரும் இல்லை.

ஒளவையாருடைய சரித்திரத்தைப் பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. அவற்றுள் ஒன்றைக் கூறுவோம். **பகவன்** என்னும் பிராமணன் ஆதி என்னும் புலைச்சியைக் கலியாணம் செய்துகொண்டான். தங்களுக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் அது பிறக்கும் இடத்திலேயே விட்டுச் செல்ல வேண்டுமென்று அவர்கள் தங்களுக்குள் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டார்கள். இதன் பிறகு முதலில் ஒளவையார் பிறந்தார். அப்பொழுது அக்குழந்தையை விட்டு விட்டுப் போக மனமில்லாமல் ஆதி மயங்கினாள். அதுகண்ட ஒளவையாராகிய குழந்தை, தன் தாயை நோக்கி,

"இட்டமுட னென்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவனுஞ் செத்து விட்டானோ?—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும் பாரமவ னுக்கன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ."

என்ற பாட்டைக் கூறியதாம். இதைக்கேட்ட ஆதி மனம் தேறி, குழந்தையை ஒரு சாவடியில் விட்டுச் சென்றனள். பிறகு இக் குழந்தையை ஒரு பாணன் கண்டெடுத்து வளர்த்து வந்தான்.

முன் காலத்தில் பாண்டிய நாட்டில் தமிழை விருத்தி செய்வதற்கு மூன்று சங்கங்கள் இருந்தன. அவை **முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கம்** என்பவைகள். இவற்றுள் கடைச் சங்கம் சுமார் ஆயிரத்து எண்ணூறு வருஷங்களுக்குமுன் மதுரையில் இருந்தது. இக்கடைச் சங்கக் காலத்தில், உறையூருக்கு அடுத்த ஒரு சிறு ஊரில் ஒளவை

யார் பிறந்தாரென்று சொல்லப்படுகிறது. ஔவையார் நாளடைவில் பல கலைகளையும் கற்று, தமிழில் மிகவும் தேர்ச்சி பெற்று விளங்கினர்.

ஔவையார் நெடுங்காலம் வாழ்ந்திருந்தார். இதன் காரணம் வருமாறு :—அக்காலத்தில் **அதிகமான்** என்ற ஓர் அரசன் இருந்தான். இந்த அதிகமானும் ஔவையாரும் நெருங்கிய நட்புடையவராய் இருந்தனர். ஒரு சமயம் அதிகமானுக்கு ஓர் அரிய நெல்லிக்கனி கிடைத்தது. அதனை உண்பவர்கள் நீண்டகாலம் வாழ்ந்திருப்பர் என்று சொல்லப்பட்டது. அப்படிப்பட்ட அரிய கனியை அதிகமான் தனது நண்பராகிய ஔவையாருக்குக்கொடுத்தான். ஔவையாரும் அதனை உண்டு, அதிகமானுடைய கொடையைப் புகழ்ந்து, நீண்ட காலம் வாழ்ந்திருந்தனர் என்கிறார்கள்.

திருவள்ளுவர், அதிகமான், கபிலர் என்னும் ஆண் மக்கள் மூவரும், உப்பை, உறுவை, வள்ளி என்னும் பெண்மக்கள் மூவரும் ஔவையாரோடு கூடப் பிறந்தவர்கள். ஔவையாரை சரஸ்வதியின் அவதாரமென்று சொல்வதுண்டு. புறநானூறு முதலிய அரிய சங்க நூல்களில் ஔவையார் எழுதிய பாடல்கள் இருக்கின்றன. ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி முதலிய நூல்களும் அவரால் சிறுவர்க்காகவே எழுதப் பட்டவை.

ஒரு சமயம் ஔவையார் மிகுந்த பசியோடு காட்டு வழியில் போய்க் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு வேளாளன் தன் வயலை உழுதுவிட்டு, இடைவேளைக் கஞ்சியைக் குடிக்க ஆரம்பித்தான். ஔவையார் அவனிடம் சென்று, " அப்பா! பசி பொறுக்க முடியவில்லை. எனக்குச் சிறிது ஆகாரம் கொடு" என்று கேட்டார். உடனே அவன் தன் பசியையும் பாராமல், "பாட்டி இந்த கஞ்சியைக் குடி, நான் இன்னும் சிறிது நேரம் உழுதுவிட்டு,

வீட்டுக்குப் போய்ச் சாப்பிடுகிறேன்" என்று கூறி, கஞ்சியைக் கொடுத்தான்.

ஔவையாரும் கஞ்சியை வாங்கி, ஆவலோடு குடித்து மகிழ்ந்து,

"வரகரிசிச் சோறும், வழுதுணங்காய் வாட்டும்
முரமுரெனவே புளித்த மோரும்—பிரியமுடன்
புல்வேளூர்ப் பூதன் புரிந்துவிருந் திட்ட சோ(று)
எல்லா உலகும் பெறும்."

என்று கூறி, வாழ்த்திச் சென்றார். அவனும் மிகச் செல்வம் பெற்று சௌக்கியமாய் வாழ்ந்து வந்தான்.

பிள்ளைகளே! இந்தப் பாடத்தினால் 'நம்மால் கூடிய மட்டும் மற்றவர்க்கு உதவவேண்டும்' என்று தெரிந்து கொண்டீர்கள். '**அறஞ்செய விரும்பு**', '**இயல்வது கரவேல்**' என்ற ஔவையார் வாக்கை மறக்கலாகாது.

21. கர்வம் ஆகாது

நாரதர், தும்புரு என்ற இரண்டு ரிஷிகள் வீணை வாசிப்பதில் வல்லவர்கள். அவர்கள் எப்பொழுதுந் தேவலோகத்தில் வீணை வாசித்து, தேவர்களைச் சந்தோஷிப்பித்து வந்தனர். ஒரு சமயம் அவர்கள் தங்களைக் காட்டிலும் வீணை வாசிப்பதில் வல்லவர் எவருமில்லை என்று கர்வம் கொண்டனர். அதனால் அவர்கள் யாரையும் மதிக்கவில்லை.

இவ்வாறு கர்வம் கொண்ட அவர்கள் ஒருநாள் தேவலோகத்தில் வீணை வாசித்தனர். வாசித்ததும் எல்லா தேவர்களுடைய வயிறும் வீங்கி விட்டன. உடனே தேவர்கள், இவர்களது வீணாகானத்தை நிறுத்தும்படி வேண்டினர். தங்களுடைய கானத்தினால் தேவர்களது வயிறு வீங்குவதைக் கண்ட ரிஷிகள் பயந்து, வீணாகானத்தை நிறுத்தினர். எல்லோராலும் கொண்டாடப்படும் தங்களுடைய கானத்திற்கு அவமதிப்பு ஏற்பட்டதைக் கண்டு, அதன் காரணத்தை அறிய **பிரம்மா**விடம் சென்று முறையிட்டனர்.

அது கேட்ட பிரம்மா, "பெரியோர்களான ரிஷி களே! இதன் காரணம் எனக்கும் தெரியவில்லை. ஆத லால் நீங்கள் **மகாவிஷ்ணுவிடம்** போய்க் கேளுங்கள்" என்றார். அவ்வாறே நாரதரும் தும்புருவும், மகாவிஷ்ணு விடம் சென்று கேட்டனர். அதற்கு அவர், "ரிஷிகளே, இதன் காரணத்தைக் கூற என்னால் முடியாது. ஆனால் பூலோகத்தில் **தண்டகாரணியத்தில்** தவம் செய்யும் ஒரு குரங்கினிடம் சென்று கேட்டால் தெரியவரும்" என்று கூறினார். ரிஷிகளும் உடனே தண்டகாரணியத்தை நோக்கிச் சென்றனர்.



தண்டகாரணியத்தில் அநேக தினங்கள் தேடி அலைந் தனர். கடைசியில் ஒரு அசோக மரத்தடியில் தவம் செய்துகொண்டிருந்த, குரங்கொன்றைக் கண்டனர். இக் குரங்குதான் ராமதூதனாகிய **ஆஞ்சநேயர்**. ரிஷிகள் வெகு நேரம் காத்திருந்தும், தவம் செய்துகொண்டிருந்த ஆஞ்ச நேயர் கண் திறக்கவில்லை. கடைசியில் அவர் விழித்து, இவர்களை நோக்கினார். உடனே ரிஷிகளும் தாங்கள் வந்த காரணத்தைத் தெரிவித்தனர்.

தெரிவித்ததும் ஆஞ்சநேயர், நாரதர் கையிலிருந்த வீணையை வாங்கி, ராமக்கிரியை என்ற ராகத்தை வாசித்தார். உடனே எதிரில் இருந்த மலை உருகியது. உருகியதும் நாரதருடைய வீணையை அதில் வைத்தார். பிறகு மலை முன்போலக் கல்லாய்விட்டது. அப்போது ஆஞ்சநேயர் ரிஷிகளை நோக்கி, "ரிஷிகளே வீணாகானத்தில் நீங்கள் வல்லவர்கள் அல்லவா? இப்போது தும்புரு கையில் இருக்கும் மற்றொரு வீணையை வாசித்து, இந்த மலையை உருக்கி, நாரதருடைய வீணையை எடுத்துச் செல்லுங்கள்" என்றார்.

நாரதரும் தும்புருவும் வெகு நேரம் அநேக ராகங்களை வீணையில் வாசித்தனர். ஒன்றும் பலிக்கவில்லை. மலை இருந்தவாறே இருந்தது. கடைசியில் தங்களால் முடியாதது கண்டு, ஆஞ்சநேயரை வேண்டிக்கொண்டனர். அதற்கு அவர், "ரிஷிகளே! நீங்கள் வீணை வாசிப்பதில் மிகவும் வல்லவர்கள் எனக் கர்வம் கொண்டீர்கள். 'வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு' என்று நினைத்துக் கர்வங் கொள்ளாமல் இருக்க வேண்டும். இதுவே நீங்கள் அறியவேண்டிய விஷயம்" என்று கூறி, குண்டக்கிரியை என்ற ராகத்தை வீணையில் வாசித்து, மலையை உருக்கி, நாரதரது வீணையை எடுத்துக்கொடுத்தார். நாரதரும், தும்புருவும் ஆஞ்சநேயரை நமஸ்கரித்துச் சென்றனர். அதுமுதல் அவர்கள் கர்வங் கொள்ளவேயில்லை.

கர்வங் கொண்டவர் கஷ்டமே அடைவர்

22. சாரணச் சிறுவர்

சாதாரணமாகப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு **நல்லொழுக்கம்** இன்றியமையாதது. படித்தால் மாத்திரம் போதாது. இந்த நல்லொழுக்கம் பழக்கத்தில் உண்டாவதற்குப் பள்ளிக்கூடத்தில் பலவித ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அவைகளுள் முக்கியமானது **சாரணச் சிறுவர் இயக்கம்.** இந்த இயக்கம் முதலில் **ஆப்பிரிக்காக்**

கண்டத்தில் சர் ராபர்ட் பேடன் பவல் என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பொழுது உலகம் எங்கும் பரவி இருக்கிறது. நமது ராஜதானியில் பல ஊர்களிலும் சாரணச் சிறுவர் இயக்கம் உண்டு.

இந்த இயக்கத்தில் பெரும்பாலும், பள்ளிச் சிறுவர் சிறுமிகளே சேர்க்கப்படுவர். இதில் சேருபவர் ஒரேவிதமான உடை அணிய வேண்டும். கையில் ஒருகோலும், இடுப்பில் கத்தி முதலிய அவசியமான சாமான்களுடன்



கூடிய தோற்கச்சையும் (பெல்ட். Belt) உண்டு. கழுத்தில் ஒரு நூல் கயிற்றில் ஓர் ஊதுகுழல்தொங்கும். இவர்கள் பல சிறு கூட்டங்களாய் இருப்பார்கள். ஒவ்வொரு படைக்கும் மாருதி, பீமன், ராமன் முதலிய பெயர்களை அமைத்துக் கொள்வார்கள். இதில் சேரும் சிறுவனை சாரணச் சிறுவன் அல்லது பாய் ஸ்கௌட் என்றும் சிறுமியை சாரணச் சிறுமி அல்லது கேர்ல் ஸ்கௌட் என்றும் சொல்வார்கள். வயதுக்கேற்றபடி 6-வயது முதல்

11-வயது வரை உள்ளவர்கள் ஒரு அணியாகவும், 11-வயது முதல் 18 வயதுவரை மற்றொரு அணியாகவும் பிரிக்கப் படுவார்கள்.

பள்ளிச் சிறுவர் இவ்வியக்கத்தில் சேர்ந்ததும் சில உறுதிமொழிகள் கூறவேண்டும். வலதுகைக் கட்டை விரலால் சிறு விரலை அழுத்தி, மற்ற மூன்று விரல்களை, நெற்றி ஓரத்தில் வைத்து, சலாம்செய்து உறுதிமொழிகளையும் சொல்லவேண்டும். சலாம் செய்யும்பொழுது காட்டும் மூன்று விரல்களும் பின்வரும் மூன்று உறுதிமொழிகளையும் அறிவிக்கும். "என்னால் இயன்றவரை (1) கடவுளுக்கும் அரசனுக்கும் என்னுடைய கடமைகளை நிறைவேற்றவும்; (2) எப்பொழுதும் பிறருக்கு உதவி புரியவும்; (3) சாரணச் சட்டத்துக்கு அடங்கி நடக்கவும் தயாராய் இருக்கிறேன் என்று எனது கௌரவத்தின் மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன்" என்பதாம்.

சாரணர்களுடைய முக்கியமான கொள்கை, **தயாராய் இரு** என்பதே. சாரணச் சட்டம் பின்வரும் பத்து விதிகள் கொண்டது.

1. **கௌரவம் காத்தல்**:—ஒவ்வொரு சாரணனும் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டும். இதற்காகச் சாரணன் என்ன நேரிட்ட போதிலும் **உண்மையே பேசவேண்டும். எவ்விதமான தீய செய்கையும் செய்யக்கூடாது.** உறுதிமொழிப் பிரகாரம் நடத்தல் வேண்டும்.

2. **ராஜ பக்தி, தேச பக்தி, பிதுர் பக்தி** முதலியன:—சாரணரிடத்தில் **தெய்வ பக்தி, ராஜ பக்தி, தேச பக்தி, பிதுர் பக்தி, குரு பக்தி** முதலிய குணங்கள் அவசியம் இருக்க வேண்டும். தவிரவும் எல்லாப் பெரியோர்களிடம் பணிவோடும், சிறியோர்களிடம் அன்போடும் நடந்து கொள்ள வேண்டும்.

3. **உதவியும் உபயோகமும்**:—சாரணன் எல்லோருக்கும், எப்போதும் வேண்டிய உதவிகள் செய்து, உபயோக

முள்ளவனுய் இருக்கவேண்டும். சமயத்தில் உதவுவதே சாரணனின் முதற் கடமை. இவ்வாறு பலருக்கும் உதவி செய்யத் தேக பலமும், தேக சௌக்கியமும் உடையவனுய் இருக்கவேண்டும். நன்ருய் நீந்தக் கற்றுக் கொள்ள வேண்டும். காயம்பட்டவர்கள், நெருப்பில் அகப்பட்டவர்கள், வியாதியஸ்தர்கள் முதலியவர்களுக்குத் தற்கால சிகிச்சை செய்யத் தெரிந்து கொள்ளவேண்டும். இவ்வளவும் தெரிந்திருந்தால்தான் சாரணன் பிறருக்கு உபயோகமுள்ளவனுய் இருக்கமுடியும்.

4. **யாவரிடத்தும் சிநேகிதம்** :—சாரணன் ஜாதி பேதம், மதபேதம் இல்லாமலும்; ஏழை, பணக்காரர் என்ற வித்தியாசம் இல்லாமலும்; எல்லோரிடத்திலும் சிநேகமும், அன்பும் உள்ளவனுய் இருக்கவேண்டும்.

5. **மரியாதை** :—சாரணன் பெரியவர், சிறியவர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் முதலிய யாவரிடத்திலும் மரியாதையுடனும் நடந்து கொள்ளவேண்டும்.

6. **ஜீவகாருண்யம்** :—சாரணன் எல்லாப் பிராணிகளிடத்தும் அன்பு உடையவனுய் இருக்கவேண்டும். அவைகளுக்குத் தானும் துன்பம் செய்யக்கூடாது; பிறர் செய்யும் துன்பத்தையும் நீக்கவேண்டும். தன் உயிரைப் போலப் பிற உயிரையும் காப்பவனே உண்மைச் சாரணன்.

7. **கீழ்ப்படிதல்** :—சாரணன் தனது மாதா, பிதா, குரு, தெய்வம், அரசன், பெரியோர், சாரணர் தலைவன் முதலிய யாவர்க்கும் கீழ்ப்படிந்து நடத்தல் வேண்டும்.

8. **முகமலர்ச்சி** :—சாரணன் தனக்கு எவ்விதமான கஷ்ட நஷ்டங்கள் வந்தபோதிலும், மனம் கலங்காது முகமலர்ச்சியுடன் இருக்கவேண்டும்.

9. **சிக்கனம்** :—சாரணன் எந்தப் பொருளையும் வீணுகச் செலவு செய்யாமல் அவசியமான அளவுதான் செலவு

செய்யவேண்டும். மிகுதியானதைச் சேர்த்து வைக்க வேண்டும்.

10. **திரிகரணசுத்தி**:—சாரணன் தனது நினைவு, பேச்சு, செய்கை முதலியவைகளில் ஒருவருக்கும் தீங்கு விளைவிக்காமல், சுத்தமாக இருத்தல்வேண்டும்.

சாரணச் சிறுவர் படை திருவிழாக்களிலும், பொதுக் கூட்டங்களிலும், பொது ஜனங்களுக்கு உதவி வேண்டிய எல்லா விடங்களிலும் வந்திருந்து, சமயத்திற்கு ஏற்ற உதவி புரிகின்றது. இச் சாரணரே உண்மைத் தேசத் தொண்டர் ஆவர். ஆகையால், சிறுவர்களே! சாரணர் படையில் சேருங்கள்.

23. ஒற்றுமை

ஒற்றுமை என்றால் ஒன்று சேர்ந்திருத்தல் என்று பொருள். ஒருவனால் செய்யமுடியாத ஒரு காரியத்தை, பலர் ஒன்று சேர்ந்தால் வெகு சுலபமாய் முடித்து விடலாம். பலர் ஒற்றுமையுடன் இருந்தால், பகைவர்களும் பயந்து நம்மிடம் வரமாட்டார்கள். உதாரணமாக, ஒரு மெல்லிய நூலை நாம் வெகு சுலபமாய் அறுத்துவிடலாம். ஆனால் பல நூல்கள் ஒன்று சேர்ந்த கயிற்றை, யானையினாலும் அறுக்க முடியாது. ஆகையால் ஒற்றுமை, மானிடர், ஜீவ ஜந்துக்கள் முதலிய யாவர்க்கும் அவசியமானது.

பறவை பிடிக்கும் வேடன் ஒருவன், ஒரு காட்டில் தன் வலையை விரித்து, பல தானியங்களை அதில் இறைத்துவிட்டு ஓரிடத்தில் ஒளிந்திருந்தான். அப்போது பக்கத்தில் இருந்த வன்னிமரத்தின் மேல் ஒரு புறாக்கூட்டம் வந்து இறங்கியது. புறாக்கள் அங்கு இறைக்கப்பட்டிருந்த தானியங்களைத் தின்ன ஆசை கொண்டன. அதைக் கண்ட அக்கூட்டத்தின் தலைமையான **சித்திரகிரீவன்** என்னும் புறா மற்றவைகளை நோக்கி, "மனிதர்களே இல்லாத இக்காட்டில் தானியம் எப்படிவரும்? பறவைகளைப்பிடிக்க

வென்றே இத்தானியங்களை யாராயினும் இறைத்திருப் பார்கள். ஆகையால் இது விஷயமாக தீர்க்காலோசனை செய்துதான் நாம் கீழே இறங்க வேண்டும்'' என்றது.

ஆனல் மற்றப் புறுக்கள் பசியினல் சித்திரக் கிரீவ னுடைய பேச்சைக் கேட்கவில்லை. உடனே கீழே இறங்கி தானியத்தைத் தின்ன ஆரம்பித்தன. அதனல் வலையில் அகப்பட்டுக் கொண்டு தத்தளித்தன. இதைக்கண்ட சித் திரக்கிரீவன் "ஐயோ! என் இனத்தார் யாவரும் வலையில் அகப்பட்டுக் கொண்டார்களே; நான் மாத்திரம் தப்பித்து

என்ன பயன்?'' என்று எண்ணித் தானும் வலையில் அகப்பட்டுக்கொண்டது. எல்லாப் புறுக்களும் தப்ப வழி யில்லாது, சித்திரக்கிரீவன் சொன்னதைக் கேட்காததைப் பற்றி வருத்தப்பட்டன.

புறுக்கள் எல்லாம் வலையில் அகப்பட்டுக் கொண்ட தைக் கண்ட வேடன், சந்தோஷத்தோடு அவைகளைப் பிடிக்கச் சென்றுன். அப்போது சித்திரக்கிரீவன் மற் றப் புறுக்களை நோக்கி, "நடந்ததை எண்ணி வருந்துவ தில் பயன் இல்லை; எல்லோரும் தப்ப ஒரு உபாயம்

சொல்லுகிறேன். எல்லோரும் ஒன்று சேர்ந்து, வலையைத் தூக்கிக் கொண்டு, பறந்து செல்லவேண்டும். இல்லாவிடில் நாம் தப்ப வழியில்லை" என்று கூறியது. உடனே எல்லாப் புறாக்களும் ஒற்றுமையாய், வலையுடன் பறந்து போயின.

இதைக் கண்ட வேடன் ஆச்சரியப்பட்டு, அவைகளின் பின்னேயே ஓடினான். ஆனால் அவைகளோ, கண்ணுக்கு எட்டாத தூரத்தில் போய்விட்டன. ஆகையால் வேடன் மனம் வருந்தி, வீடு திரும்பினான். சித்திரக்கிரீவன் தன்னுடைய கூட்டத்தோடு, மற்றொரு வனத்தில் போய் இறங்கிற்று. அவ்வனத்தில் சித்திரக்கிரீவனது சிநேகிதனான இரணியன் என்னும் எலியரசன் இருந்தது. புறாக்கள் இறங்கிய சப்தத்தைக் கேட்ட இரணியன் தன் வளையிலிருந்து வெளியே வந்து, 'சிநேகிதா! என்ன விசேஷம்?" என்று கேட்டது.

அதற்குச் சித்திரக்கிரீவன் "நாங்கள் இவ்வலையில் மூடத்தனமாய் அகப்பட்டுக் கொண்டோம். உன் கூர்மையான பற்களால் இந்த வலையைக் கடித்து அறுத்து, எங்களை விடுவி" என்றது. இரணியன் அவ்வாறே செய்தது. எல்லாப் புறாக்களும் விடப்பட்டுச் சந்தோஷித்தன.

புறாக்கள் முதலில் ஒன்று படாததினால் வலையில் அகப்பட்டுக்கொண்டன. பிறகு அவைகள் ஒன்று சேர்ந்ததால் வலையோடு பறந்து தப்பின. அதன்பின் சித்திரக்கிரீவனுடைய சிநேகிதனான இரணியனால் முற்றிலும் விடுவிக்கப்பட்டன. இதனால் 'ஒற்றுமை யாவர்க்கும் இன்றியமையாதது' என்பது நன்கு விளங்கும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வே."
'சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை.'

24. மதுரைமாநகர்

நமது ராஜதானியின் தலைநகரமாகிய சென்னையைப் பற்றி, முன் புத்தகத்தில் படித்தீர்கள். சென்னைக்குப் பின் இரண்டாவதாக **மதுரைமாநகர்** சிறந்து விளங்குகின்றது. மதுரை சென்னைக்குத் தென் மேற்கில் இருக்கிறது. இது ஏறக்குறைய ஒரு சதுர வடிவமானது. இந்நகரத்தின் நடுவில் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசர் கோயில் உள்ளது. இதைச் சுற்றிலும் **சித்திரை வீதி, ஆவணிமூல வீதி, மாசி வீதி, வெளி வீதி** முதலிய சதுரமான தெருக்கள் அமைந்திருக்கின்றன. மேற்கூறிய நான்கு வெளி வீதிகளுக்கு உள்ளடங்கின பாகமும், மேற்கே ரயில்வே ஸ்டேஷனும் அதைச் சேர்ந்த இடங்களும், **மணி நகரம்** என்ற இடமும்; வடக்கே வெளி வீதிக்கு வெளிப்பட்ட இடங்களும், **தல்லாகுளமும்,** கிழக்கே வெளி வீதிக்கு வெளிப்பட்ட இடங்களும், **வண்டியூரும்**; தெற்கே வெளி வீதிக்கு வெளிப்பட்ட இடங்களும் சேர்ந்து மதுரையாகும்.

இம்மதுரை முன்காலத்தில் **கடம்பவனம்** என்ற காடாக இருந்தது. அங்கு ஒரு சிறு கோயிலும் குளமும் இருந்தன. அக்காலத்தில் பாண்டிய நாட்டைக் **குலசேகர பாண்டியன்** ஆண்டு வந்தான். அவனுடைய தலைநகர் **மணலூர்.** அவன் கடம்ப வனத்தைப்பற்றிக் கேள்விப்பட்டான். உடனே அங்கு சென்று, கோயிலை நன்றாகக் கட்டி, கடம்பவனத்தை அழகிய நகரமாக்கினான். இந்நகரம்தான் மதுரை. பிறகு குலசேகர பாண்டியன் மதுரையைத் தலைநகரமாக்கிக் கொண்டான். இம்மதுரையில் பல ஜனங்கள் வந்து குடியேறினர். பலவிதத்திலும் மதுரை சிறந்து விளங்கிற்று.

பிற்காலத்தில் இம்மதுரையை நாயக்க அரசர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களில் சிறந்தவர் **திருமலை நாயக்கர்.** இவர் திருச்சியிலேயே வசித்து வந்தார். அப்போது இவர் வியாதியால் வருந்தினர். ஒரு சமயம் இவர், உற்

சவம் பார்க்க மதுரைக்குச் சென்றார். சென்றதும் இவருடைய வியாதி நீங்கியது. அதனால் சந்தோஷம் அடைந்த திருமலை நாயக்கர், மதுரையைத் தலைநகராக்கிக் கொண்டார். அங்குப் பல கட்டடங்களைக் கட்டினார். கோயிலைப் பலவிதத்திலும் புதுப்பித்தார். மதுரைமாநகரில் உள்ள மீனாக்ஷி சுந்தரேசர் கோயிலும்; புதுமண்டபம், ராயகோபுரம், திருமலை நாயக்கர் மஹால் முதலிய கட்டடங்களும்; தமுக்கமும் வண்டியூர்த் தெப்பக்குளமும் யாவரும் அவசியம் பார்க்க வேண்டியவைகள்.

மீனாக்ஷி சுந்தரேசர் கோயில் :—இது இந்நகரின் நடுவில் சிறந்து விளங்குகிறது. கோயிலின் நான்கு பக்கங்களிலும் உயர்ந்த கோபுரங்கள் உண்டு. இக்கோபுரங்களில் சிறந்த பதுமைகள் பல வர்ணங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. கோயிலின் உள் புறத்தில் **ஆடி வீதி** என்ற கருங்கல் வீதி இருக்கிறது. இவ்வீதியில் பிரதி தினமும் காலையிலும் மாலையிலும் நடந்து வருவது தேகத்திற்கு மிக்க ஆரோக்கியத்தைக் கொடுக்கும். கோயிலின் உள்ளேயுள்ள பல தூண்களில் பல



உருவச்சிலைகளும் சிறந்த காக்ஷிகளும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர, **ஆயிரக்கால் மண்டபமும், பொற்றாமரைக் குளமும்** இக் கோயிலினுள்ளேதான் சிறந்து விளங்குகின்றன. இங்கு பன்னிரண்டு மாதத்திலும் உற்சவங்கள் நடைபெறுகின்றன.

புதுமண்டபம் :—இது கோயிலுக்குக் கிழக்கே யிருக்கிறது. இது ஒரு நீண்ட சதுரவடிவமான கட்டடம். இதன் நீளம் சுமார் 105 கஜம்; அகலம் 33 கஜம். இதில் நான்கு வரிசையாகப் பல தூண்கள் இருக்கின்றன. ஒவ்வொரு

தூணிலும் சிறந்த சிற்ப உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இம்மண்டபம் திருமலை நாயக்கரால் கட்டப்பட்டது. இதன் நடுவில் உள்ள சில தூண்களில் திருமலை நாயக்கர், அவரது முன்னோர் முதலியவர்களின் உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. இம்மண்டபத்தைச் சுற்றிலும் தண்ணீர் நிரப்புவதற்காகச் சிறு அகழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் வருஷந்தோறும் **வசந்த உற்சவம், எண்ணெய்க் காப்பு உற்சவம்** முதலிய உற்சவங்கள் நடைபெறுகின்றன.

ராயகோபுரம் :—இது புதுமண்டபத்திற்குக் கிழக்கிலுள்ள ஒரு முடிவு பெறாத கற்கோபுரம். இதன் மத்தியில் நான்கு கல் தூண்கள் பூமிக்குமேல் 60 அடி உயரம் இருக்கின்றன. இக்கோபுரம் முடிவு பெற்றிருக்குமானல், உலகத்திலேயே இணையில்லாததாய் இருக்கும். இதே மாதிரி முடிவுபெறாத ராயகோபுரங்கள், **ஸ்ரீரங்கம், மஹாபலிபுரம்** முதலிய இடங்களிலும் இருக்கின்றன.

திருமலை நாயக்கர் மஹால் :—இது மதுரைநகரின் தென்கிழக்கில் இருக்கிறது. இதன் பெயருக்கேற்றபடி இதில் தான் நாயக்கர் வசித்து வந்தார். இதை கட்டியவரும் அவரே. இரும்பும், மரமும் ஒரு சிறிதும் இல்லாமல், முழுதும் செங்கல்லாலும், சுண்ணும்பாலுமே கட்டப்பட்ட ஒரு சிறந்த கட்டடம். இதன் மேல் பாகம் முழுவதும், வளைவுமச்சு வேலைப்பாடு அமைந்துள்ளது. இம் மேல் பாகத்தை 15 அடி சுற்றளவும், 40 அடி உயரமும் உள்ள பெரிய தூண்கள் தாங்கி நிற்கின்றன. இக்கட்டடத்தில் சில சலவைக்கல் மண்டபங்கள் இருக்கின்றன. இன்றைக்கும் இம்மஹால் மிகுந்த சிறப்பும், பலமும் பொருந்தியுள்ளது.



வண்டியூர்த் தெப்பக்குளம் :—இது மதுரையின் கிழக்கே இரண்டு மைல் தூரத்தில் இருக்கும் ஒரு தெப்பக்குளம். **வண்டியூர்** என்னும் கிராமத்திற்குப் பக்கத்திலிருப்பதால், இதை வண்டியூர்த் தெப்பக்குளம் என்று சொல்லுவார்கள். இது ஏறக்குறைய ஒரு மைல் சுற்றளவுள்ள



ஒரு சதுரமான தெப்பக்குளம். இதன் மத்தியில் ஒரு நீராழி மண்டபம் இருக்கிறது. இதில் ஒரு சிறு கோயிலும், ஐந்து சிறிய கோபுரங்களும் இருக்கின்றன. தென்னை, மா பலாமரங்கள் அடர்ந்த சோலையும் உண்டு. இக்குளத்தில் வருஷந்தோறும் தைப்பூசத்தன்று, மீனாக்ஷி சுந்தரேசருக்குத் தெப்ப உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெறுகிறது. இக்குளமும் திருமலை நாயக்கர் வெட்டியதே.

தமுக்கம் :—இது வைகையாற்றின் வடகரையில் சிறந்து விளங்கும் கட்டடம். கோடை காலத்தில் திருமலை நாயக்கர் இதில் வசிப்பது வழக்கமாம். தவிரவும், இதில் நாயக்கர் மிருகக்காக்ஷிசாலை வைத்திருந்ததாகவும் சொல்லுகிறார்கள்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த மதுரைமாநகர், நமது ராஜதானியில் இரண்டாவது நகரமாக விளங்குகின்றது. பல தேசத்து யாத்திரிகர்களும் இங்கு வந்து பார்த்து மகிழ்ந்து, புகழ்ந்து செல்லுகின்றனர்.

25. விடு கதைகள்

1. கருப்புச் சட்டைக்காரன்
காவலுக்குக் கெட்டிக்காரன். (பூட்டு)

2. இருப்புச் சட்டை வீரன்
இருப்பைக் காவல் செய்யும் தீரன். (இரும்புப்பெட்டி)

3. கத்தி போல் இலை இருக்கும்
கவரிமான் பூப் பூக்கும்
தின்னப் பழம் பழுக்கும்
தின்னாத காய் காக்கும். (வேப்பமரம்)

4. அண்ணன் தம்பி ஆகிய இருவர்
அண்ணனுக்கு எட்டாது தம்பிக்கு எட்டும். (உதடுகள்)
தம்பிக்கு எட்டாது ; அண்ணனுக்கு எட்டும்,
தரணியில் யாதெனச் சாற்றிடுவீரே. (கண்இமைகள்)

இருசொல் அலங்காரம்

1. நாய் ஓடுவதேன்
நாக்குத் தித்திப்பதேன் ? } கற்கண்டால்.

2. ஈசுவர வருஷம் பிறப்பதேன் ?
இருப்பவர் தாம் இறப்பதேன் ? } தாதுபோய்.

3. எருக்கிலை பழுப்பதேன் ?
எருமைக் கன்று சாவதேன் ? } பாலற்று.

4. செவ்வாய்ப்பொழுது புலர்வதேன் ?
செந்தாமரைகள் மலர்வதேன் ? } திங்கள்போய்.

26. எண்ணித் துணிக கருமம்

எந்தக் காரியத்தைச் செய்ய ஆரம்பித்தபோதினும் தீர ஆலோசித்தே செய்யவேண்டும். ஒரு காரியத்தைச் செய்தால் அதனால் நன்மை உண்டாகுமா அல்லது தீமை உண்டாகுமா என்று நன்றாய்க் கவனித்த பின்பே செய்யவேண்டும். அவ்வாறு கவனியாமல் செய்தால் பின் கஷ்டப்படுவது நிச்சயம்.

தென் நாட்டில் சூரசேனன் என்ற ஓர் அரசன் இருந்தான். அவன் தன் குடிகளைப் பக்ஷத்தோடு காத்து வந்தான். ஒரு நாள் அவன் ஒரு காட்டில் வேட்டையாடச் சென்றான். வெகுநேரம் வேட்டை யாடிவிட்டு, தன் நகரத்துக்குத் திரும்பினான். அப்பொழுது

ஒரு முனிவர் அவன் எதிரில் வந்தார். அரசன் அவரைப் பணிந்தான். முனிவர் அரசனை நோக்கி, "அரசே! ஆயிரம் பொன் கொடுத்தால், உனக்கு ஒரு புத்திமதி எழுதிக் கொடுப்பேன்" என்றார். உடனே அரசன் ஆயிரம் பொன்னை வரவழைத்துக் கொடுத்தான். முனிவர் ஓர் ஓலை நறுக்கைக் கொடுத்து மறைந்தார்.

அரசன் அந்த ஓலை நறுக்கைப் பார்த்தான். அதில் **எண்ணித் துணிக கருமம்** என்ற ஒரே வரிதான் இருந்தது. இதனால் தனக்கு நன்மையே விளையும் என்று அரசன்



எண்ணினன். தன் அரண்மனை போய்ச் சேர்ந்தான். சேர்ந்ததும் அரண்மனைச் சுவர்கள், ஆசனங்கள், பாத்திரங்கள் முதலிய எல்லா இடத்திலும், இந்தப் பழமொழியை எழுதி வைத்தான். எங்கு பார்த்தாலும், இப் பழமொழி இருந்தது.

பல நாட்களுக்குப்பின் அரசனுக்கு வியாதி உண்டாயிற்று. அவனது வயிற்றில் ஒரு கொப்புளம் ஏற்பட்டது. அரண்மனை வைத்தியன் வந்து பார்த்து, 'கொப்புளத்தை அறுத்து, மருந்து கட்டவேண்டும்' என்றான்.

இதைக் கேட்ட அரசன், மறுதினம் தனக்குச் சிகிச்சை செய்யலாம் என்று கூறினன். வைத்தியனும் ஒப்புக் கொண்டு வீடு சேர்ந்தான்.

சூரசேனனுடைய மந்திரியான துர்ப்புத்தி, அரசனைக் கொன்று, தான் அரசனுக வேண்டும் என்று வெகு நாளாய் எண்ணியிருந்தான். அதனுல் அவன் வைத்திய னிடம் சென்று, "ஐயா! வைத்தியரே! நாளை நீர் அரச னுடைய கொப்புளத்தை, விஷம் தடவிய கத்தியால் அறுக்கவேண்டும். அரசன் இறந்துவிடுவான். உடனே நான் அரசனுவேன். உம்மை முதல் மந்திரியாகச் செய் கிறேன். இப்பொழுது இதை முன் பணமாக வைத்துக் கொள்ளும்" என்று கூறி, ஒரு பை தங்க நாணயத்தைக் கொடுத்தான். வைத்தியனும் பணத்தாசையால் அவ் வாறே செய்ய ஒப்புக்கொண்டான்.

மறுநாள் விஷம் தடவிய கத்தியை எடுத்துக் கொண்டு, வைத்தியன் அரசனிடம் சென்முன். அங்குச் சென்றதும் கொப்புளத்தை அறுப்பதற்காக விஷம் தட விய கத்தியை வெளியே எடுத்தான். அப்பொழுது பக் கத்துச் சுவர்களிலும், அரசன் படுத்திருந்த மஞ்சத்திலும் எழுதியிருந்த **எண்ணித் துணிக கருமம்** என்ற பழமொழியை அவன் கண்டான். உடனே அவன் கைகள் நடுங்க ஆரம் பித்தன. "ஐயோ! நான் இந்தக் கத்தியால் அரசனைக் கொன்முல் என்னைப் பிடித்து, தூக்கில் போட்டு விடுவார் களே. ஆகையால் மந்திரி சொன்னபடி செய்யக் கூடாது" என்று எண்ணி, விஷம் தடவிய கத்தியை உள்ளே வைத்துவிட்டு, வேறு கத்தியை எடுத்தான்.

வைத்தியன் கத்தி மாற்றுவதையும், அவனது கைகள் நடுங்குவதையும் கண்ட அரசன், அவனை நோக்கி, "வைத் தியரே! ஏன் உமது கைகள் நடுங்குகின்றன? ஏன் கத் தியை மாற்றினீர். உடனே உண்மையைச் சொல்லும். இல்லாவிடில் உம்மைத் தூக்கில் போடுவேன்" என்முன்.

இதைக் கேட்ட வைத்தியன் நடுநடுங்கி, உண்மையைக் கூறி, அரசனது காலில் விழுந்து, மன்னிக்குமாறு வேண்டினன்.

உடனே அரசன் வைத்தியனை மன்னித்துவிட்டு, மந்திரியைத் தன் நாட்டை விட்டுத் துரத்தினன். முனிவர் கொடுத்த சிறு பழமொழியால் தான் தப்பியதை அறிந்த அரசன் மிகவும் சந்தோஷப்பட்டான். அந்தப் பழமொழியைத் தன் நாடெங்கும் எழுதி வைத்தான். பிறகு அவ்வரசன் நெடுநாள் வாழ்ந்திருந்தான். இக்கதையினல்,

ஆராயச் செயல் அனர்த்தமே விளைக்கும் என்பதும், **மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்** என்பதும் நன்கு விளங்கும்.

27. நீதி போதனை

(ஆனந்தக் களிப்பு)

நல்வழி யாது பிள்ளாய்!—இதை
நாடித் தெரிந்து பழகிக்கைக் கொள்ளாய் (நல்ல)

தெய்வத்தை தினந்தோறும் வணங்கு—நலம்
செய்யும் பெரியோரைச் சேரவே இணங்கு
வையக மன்னனை வாழ்த்து—தவ
மாதவர் முன்தலை வணங்கியே தாழ்த்து (நல்ல)

கல்வியைப் பரிவொடு கற்பாய்—பின்னர்க்
கற்ற நெறியிற் கருதியே நிற்பாய்
செல்வர் முயற்சியைத் தெரிவாய்—நீயும்
செல்வமும் கல்வியும் சேர்ந்திடப் புரிவாய் (நல்ல

எவர்க்கும் இனிய சொற் சொல்லு—பின்னும்
ஏழைகளாயின் இணங்கியே நில்லு
இவர்க்கும் எனக்கும் ஏன் நேசம்?—என்ன
எண்ணில் அந்தோ எதிரேவரும் மோசம் (நல்ல)

உன்னு லியன்றதோர் உதவி—யார்க்கும்
உவப்புடன் செய்வதே உயர்ந்த பதவி
என்னாலே முடியாதி தென்றே—சொல்லா
தெடுத்ததோர் வேலையை முடித்திடல் நன்றே (நல்ல)

கோபத்தால் பிறரோடு வாது—கூறிக்
கொடுமை செய்யக் கொண்ட கெடுமதி தீது
ஆபத்தில் கைகொடுத்தவரே—என்றும்
அன்னைக்கும் தந்தைக்கும் அதிகராவரே (நல்ல)

தீமையைச் செய்பவர் சிறியர்—அதைச்
சிறிதுமே எண்ணாது மறப்பவர் பெரியர்
வாய்மையே சொல்லுவோர் பெரியர்—வாயால்
மறந்தேனும் பொய்மொழி வழங்குவோர் சிறியர்
(நல்ல)

28. பருத்தி

மனிதருக்கு மிகவும் அவசியமான பொருள்கள் உணவும், ஆடையுமே. உணவு நமக்குப் பலவகையில் கிடைக்கின்றது. நாம் உடுக்கும் ஆடைகள் பெரும்பாலும் பருத்திப் பஞ்சு மூலமாகவே கிடைக்கின்றன. இவை தவிர, பட்டு, கம்பளி முதலியவைகளால் ஆகிய ஆடைகளையும் அணிகிறோம். ஆனால் ஏழை, பணக்காரர் முதலிய யாவரும் உடுப்பது பருத்தி ஆடைகளே.

பருத்திப் பஞ்சு ஒருவகைச் செடியிலிருந்து கிடைக்கிறது. அதற்குப் **பருத்திச் செடி** என்று பெயர். அச்செடியில் காய்க்கும் காய் வெடித்து, வெண்ணிறமான பஞ்சு கிடைக்கிறது. செடி தவிர ஒருவித மரத்திலிருந்தும் பருத்தி கிடைக்கிறது. அதற்கு **மரப்பருத்தி** என்று பெயர். **சீன** தேசத்திலும், இந்தியாவிலும் இது காணப்படுகிறது. பருத்தி மரங்கள் பல வருஷங்கள் இருந்து, வருஷந்தோறும் பலன் தரும்.

ஆயினும் செடிப்பருத்தியே எங்கும் அதிகமாய்க் காணப்படுகிறது. பருத்தியில் **நாட்டுப் பருத்தி, கம்போடியா**

பருத்தி, அமெரிக்கன் பருத்தி எனப் பல வகை உண்டு. இவை



களில் கம்போடியாப் பருத்தி நெசவுக்கு ஏற்றதாகவும், அதிலிருந்து நூற்கும்நூல் அதிக நீளமாகவும் இருக்கும். அமெரிக்கன் பருத்தி யந்திர நெசவுக்கு ஏற்றதாகவும், அதிலிருந்து நூற்கும் நூல் மிகவும் நயமாகவும் இருக்கும். பருத்திச்செடி நமது தேசத்தில் ஏராளமாய்ப் பயிரிடப்படுகின்றது. நமது சென்னை ராஜதானியில் திருநெல்வேலி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், கடப்பை, கர்நூல், பல்லாரி, கோதாவிரி, கிருஷ்ணு முதலிய ஜில்லாக்களிலும், பம்பாய், பீஹார் மாகாணங்களிலும் குஜரத்திலும் பருத்திச் செடி அதிகம்.

பருத்தி புன்செய் நிலத்திலே வளரும் செடி. அதிலும் கரிசல் நிலமே அதற்கு ஏற்றது. இதற்கு மழை அதிகம் வேண்டியதில்லை. ஆடி, ஆவணி, புரட்டாசி மாதங்களில் பெய்யும் கோடை மழைக்குப்பின் நிலத்தை உழுவார்கள். உழுதபின், ஆட்டுப் புழுக்கை, மாட்டுச்சாணம், எலும்புத்தூள், கொட்டைமுத்துப் பிண்ணாக்கு முதலியவற்றை எருவாகப் போடுவார்கள். விதைப்பதற்கு நன்றாய் முற்றிய விதைகளைத் தெரிந்தெடுப்பார்கள். பிறகு அவைகளில் ஒட்டிக் கொண்டிருக்கும் பஞ்சு போகும்படி, சாணிநீரில் ஊறவைத்து உலர்த்தி நிலத்தை உழுது, நான்கு அடிக்கு ஒரு குழியாகத் தோண்டி, குழி ஒன்றில் இரண்டு விதைகள் போட்டு மூடுவார்கள்.

ஒரு மழை பெய்தவுடன் செடிகள் வளர ஆரம்பிக்கும். பிறகு மாதத்திற்கு ஒரு மழையாக இரண்டு மூன்று

மழை பெய்தவுடன் செடி நன்ருய் வளரும். செடி சிறிது வளர்ந்ததும் பக்கத்தில் வளரும் களைகளை எடுத்துவிட வேண்டும். பருத்திப் பூ மஞ்சள் நிறமாய் இருக்கும். காய்கள் பச்சை நிறம்.

காயில் மூன்று நான்கு அறைகள் உண்டு. காய் முற்றினதும் வெடித்து, பஞ்சு வெளிவரும். அப்போது ஆண், பெண் முதலிய பல கூலியாட்கள், அவைகளைப் பறித்துக் கூடைகளில் சேர்ப்பார்கள். பிறகு அதனை வியாபாரிகள் வாங்கிச் செல்வார்கள்.

பஞ்சிலிருந்து விதையைப் பிரித்து எடுக்க, **மணை** என்ற ஒரு கருவி உண்டு. இதனுல் ஒரு பெண் பிள்ளை ஒரு நாளில் ஒரு மூட்டைப் பருத்தி விதை பிரிக்கலாம். இதுவே முன்கால வழக்கம். இப்போது விதை பிரித்தல் யந்திரங்களால் நடைபெறுகிறது. இப்படி விதை பிரித்த பஞ்சை, சிப்பங்களாக்கி, அயல் நாட்டுக்கு அனுப்புகின்றனர். விதை எடுத்த பஞ்சை வில்லால் அடித்து, பட்டை போடுவதும் உண்டு.

இந்தப் பட்டைகளிலிருந்து நூல் நூற்க ஆரம்பிப்பார்கள். முன் காலத்தில் நம் நாட்டில் மிகவும் சிறந்த ஆடைகள் நெய்யப்பட்டன. அதற்கு வேண்டிய நூல்கள் **கைராட்டினத்திலேயே** நூற்கப்பட்டு வந்தன. ஆனுல் இப்போது நமக்கு வேண்டிய நூல்களும், ஆடைகளும் யந்திரங்களின் உதவியால் அந்நிய நாட்டிலே செய்யப்பட்டு வந்து விடுகின்றன. நம் நாட்டிலேயே கைராட்டினத்தில் நூல் நூற்ற ஆடைகள் நெய்ய வேண்டுமென்ற ஒரு புதிய உணர்ச்சி, பொது ஜனங்களிடையே உண்டாயிருக்கிறது. அதன்படி **கதர்** ஆடைகளும், சுதேச ஆடைகளும் தயாராகி, விற்கப்படுகின்றன.

இவ்வாறு நூற்ற நூலைத் துணிகளாக நெய்வதற்கு, **கைத்தறி** ஒன்று உண்டு. இக்காலத்தில் பலர் அயல் நாட்டு

நூலை வாங்கி, துணி நெய்து பிழைக்கிறார்கள். ஆனால் யந்திரத்தால் நெய்யப்படும் துணிகளே அதிகம் செலவாகின்றன.

பருத்தி விதை மாடுகளுக்கு உணவாகின்றது. விதையிலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கிறார்கள். அது விளக்கு எரிக்கவும், **ஸோப்பு** என்னும் **சவக்காரம்** செய்யவும் உபயோகப்படுகிறது. பருத்தி விதையின் சாறும், செடியின் வேறும் மருந்தாக உபயோகப்படுகிறது. ஆகையால் பருத்திச் செடி நமக்குப் பலவிதத்திலும் பயன்படுகிறது.



29. ஆறும் ஏரியும்

பிள்ளைகளே! மழையைப்பற்றி நீங்கள் முன்னமே படித்திருக்கிறீர்கள் அல்லவா? அந்த மழை பல பிராணிகளும் குடிக்கவேண்டிய தண்ணீரும் புல் பூண்டுகள் முதலிய செடி, கொடி, மரங்களது வளர்ச்சிக்கு வேண்டிய தண்ணீரும் கொடுத்து உதவுகிறது. தவிரவும். சூரிய வெப்பத்தின் கொடுமையைத் தணித்து, அதனால் ஏற்படும் பல கொடிய வியாதிகளைத் தடுத்து விடுகிறது.

மனிதனுக்கு ஆகாரத்திற்குமேல் அவசியமானது தண்ணீர். ஓர் ஊரில் இருக்கும் ஜனங்களுக்கு, தண்ணீர் எப்படிக் கிடைக்கிறது? மழையாகப் பெய்யும் தண்ணீர், ஊரில் உள்ள கிணறுகள், குளம், குட்டை, ஏரி முதலியவைகளில் நிரம்பி, கிராம வாசிகளுக்கு வேண்டிய விதத்தில் உபயோகமாகிறது. குளம், குட்டைகளில் உள்ள தண்ணீர், பெரும்பாலும் குளிப்பதற்கே உபயோகப்படுகிறது. வீடுகளில் உள்ள கிணற்று நீர் குடிக்கவும்; குளிக்கவும் உதவுகிறது. வெளியிடங்களில் உள்ள கிணற்றிலிருந்து, **புன்செய்** நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதுண்டு.

ஒவ்வொரு கிராமத்திலும் ஓர் ஏரி இருக்கும். அது கிராமத்திற்கு ஏற்றபடி, பெரியதாகவோ சிறியதாகவோ இருக்கும். கிராமத்திலுள்ள நிலங்களுக்கு வேண்டிய அளவுக்கு மேல், அதில் தண்ணீர் தேக்கப்படும். ஏரியில் உள்ள தண்ணீரை, ஒரு வாயில் வழியாய் நிலங்களுக்கு விடுவார்கள். அவ்வாயிலுக்கு, **மடை** என்று பெயர். மடை வழியாய் வெளியே வந்த தண்ணீர், சிறு கால்வாய்கள் மூலமாய் நிலங்களுக்குப் பாயும். ஏரி, ஊருக்கு மிகவும் உபயோகமாயிருந்து, அழகு கொடுப்பதால், இதை **ஊரணி** என்று சொல்லுவார்கள். ஏரிக்கு மழைத் தண்ணீர் தவிர, ஆறுகளிலிருந்தும் தண்ணீர் வருவதுண்டு.

ஆறு என்றால் என்ன? மலைமேல் விழும் மழை ஜலம், மலைச்சரிவில் வழிந்து ஓடும். முதலில் அது சிறு கால்வாய்போல் இருக்கும். வரவர அது பெரியதாகும். இதில் பல சிற்றாறுகள் வந்து சேரும். அவைகளுக்கு **உபநதிகள்** என்று பெயர். ஆறு பல ஊர்களின் வழியாக ஓடி, கடைசியில் கடலில் கலந்துவிடும். இவ்வாறு கடலில் கலப்பதற்கு **சங்கமம்** என்று பெயர். கடலில் கலக்கும் இடத்திற்கு **முகத்துவாரம்** என்று பெயர்.

ஆற்றின் முகத்துவாரம் மிகவும் அகன்று இருக்கும். ஆறு பல இடங்களிலிருந்து, வண்டல் மண்ணை அடித்துக் கொண்டுவந்து, முகத்துவாரத்தில் சேர்க்கும். அதனால் முகத்துவாரத்தில் பல திட்டுகள் ஏற்படும். இவ்வாறு திட்டுகள் ஏற்படுவதால், ஆறு பல பிரிவுகளாகப் பிரியும். அப்பிரிவுகளுக்குக் **கிளை நதிகள்** என்று பெயர். சில ஆறுகளில் சில மாதங்களே தண்ணீர் ஓடும். சில ஆறுகளில் வருஷம் முழுவதும் தண்ணீர் ஓடும். இதற்கு **ஜீவநதி** என்று பெயர்.

சில ஊர்களில் ஆற்றுநீரை, நேரே வயலுக்குப் பாய்ச்சிக் கொள்வார்கள். ஆற்றின் குறுக்கே **அணை** கட்டிப் பாய்ச்சிக் கொள்வதும் உண்டு. ஆற்றிலிருந்து கால்வாய்கள் வழியாய்த் தண்ணீரைக் கொண்டுபோவதும் உண்டு. மிகுதியான தண்ணீரே கடலில் போய்க் கலக்கிறது. சில சமயங்களில் ஆற்றில் தண்ணீர் மிகவும் அதிகமாக வரும். அதற்கு **வெள்ளம்** என்று பெயர். பெரு வெள்ளம் வந்தால் ஆற்றின் கரையில் உள்ள கிராமங்கள் அழிந்து போகும். மனிதர்கள், ஆடுமாடுகள் பயிர் பச்சைகள், வீடுகள் முதலியவைகளுக்குச் சேதமுண்டாகும்.

ஆறு நமக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது. இதனால்தான் ஆற்றின் அருகே உள்ள ஊர்கள் செழிப்பாக இருக்கின்றன. ஆற்றுப் பாய்ச்சல் இல்லாத ஊர்கள் அவ்வளவு செழிப்பாக இருக்காது. இதனாலேயே **ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்** என்ற முதுமொழி ஏற்பட்டது.

30. அதிவீர ராம பாண்டியர்

சுமார் நானூறு வருஷங்களுக்கு முன், **திருநெல்வேலியி** லுள்ள **கொற்கை** நகரில் **அதிவீரராமர்** என்ற பாண்டிய அரசர் ஆண்டு வந்தார். அவருக்கு **வரதுங்க பாண்டியர்** என்பவர் தமையனார். அவர் **திருக்கருவை** என்னும் நகரில் செங்கோல் செலுத்தி வந்தார். இவர்களிருவரும் மதுரையில் ஆண்ட பாண்டியர்க்கு அடங்கியவர்களே.

அதிவீர ராமரும் வரதுங்கரும் தமிழ், வடமொழி ஆகிய இரு பாஷைகளிலும் வல்லவர்கள். கவித் திறத்தில் மிகவும் சிறந்தவர்கள். வரதுங்க பாண்டியர் சிவபெருமானிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர். அவர் பாடிய பாடல்களெல்லாம் சிவபெருமானைப் போற்றுவனவே. வரதுங்கரின் மனைவியாரும் தமிழில் வல்லவரே. ஆனால் அதிவீரராமரோ உலக விஷயங்களில் ஈடுபட்டு, சிற்றின்பத்தை பற்றியே பாடி வந்தார்.

அதன்படியே அதிவீர ராமர் தமிழில் **நைடதம்** என்ற நூலைப் பாடத் தொடங்கினர். நைடதம் நளமகாராஜனுடைய கதையைக் கூறும் நூல். வழக்கப்படியே சிற்றின்பங்களைப் பற்றி விமரிசையாகப் பாடினர். இவ்வாறு பாதிநூல் முடிந்ததும், பாடல்களைத் தன் தமையனரிடம் காண்பித்தார். அவைகளைப் பார்த்த வரதுங்கர், "தம்பீ! எம்பெருமானைத் துதியாது, மனிதனைப் புகழ்ந்து, சிற்றின்பத்தையே பாடினையே" என்று கூறி வருந்தினர்.

இதைக் கேட்டதும் அதிவீரராமரது உற்சாகம் குறைந்துவிட்டது. இருந்தபோதிலும் எடுத்த காரியத்தை முடிக்கவேண்டும் என்று எண்ணி, ஒருவாறு பாடி முடித்தார். முடித்ததும், தமது சமஸ்தானப் புலவர்களிடம் காட்டினர். அவர்கள் அவருடைய நூல் "**கரும்பின் இனிப்பைப் போல்** சிறந்து விளங்குகிறது" என்றனர். பிறகு அதிவீர ராமர் தனது நைடதத்தை, தமையனரது மனைவியிடம் காட்டினர். அந்த அம்மையார் அதைப் பார்த்து, "வேட்டை நாய் காட்டிற்குச் செல்லும்போது ஊக்கத்துடன் சென்று, திரும்பி வரும்போது சோர்ந்து வருவது போல் இருக்கிறது" என்று கூறினர்.

அதிவீரராமர் இதைக் கேட்டு, பெருங்கோபங் கொண்டார். உடனே தன் ஊர் சென்று, படைகளைத் திரட்டி, தமையனரோடு சண்டை செய்யப் புறப்பட்டார். தன் தம்பி படையெடுத்து வந்ததைக் கேட்ட வரதுங்கர் ஒரு

ஓலையில் "ஆருயிர்த் தம்பீ! இவ்வுலகத்தில் **கர்ணன், இராவணன், அர்ச்சுனன்** இவர்களைப்போல் நீ இராதே. ஆனல் **ஸ்ரீராமனையும் பரதனையும்** போல் இரு" என்ற பொருளுள்ள ஒரு பாட்டை எழுதி யனுப்பினர்.

இந்தப் பாட்டைப் பார்த்த அதிவீர ராமர் மனம் வருந்தி, தனது தப்பிதத்தை உணர்ந்தார். உடனே படைகளைத் திருப்பி யனுப்பிவிட்டு, தமையனரிடம் சென்று, அவரை வணங்கினர். அப்போது வரதுங்கர், "தம்பீ, உனது சமஸ்தானப் புலவர்கள் கூறியதையே உன் மதினியும் கூறினள். கரும்பை அடியிலிருந்து தின்றுகொண்டே போனல், முதலில் இனிப்பும், அதன் கடைசியாகிய கொழுத்தாடைப் பக்கத்தில் உப்பும் தோன்றும். அது போலவே உன் மதனியும் உனது நைடதத்தை வேட்டை நாய்க்கு ஒப்பிட்டாள். ஆனல் பாடல்கள் சிறந்தவைகளே. ஆகையால் நீ மனம் வருந்தவேண்டாம்" என்ருர்.

உடனே அதிவீர ராமர் சந்தோஷித்து, **நறுந்தொகை** என்னும் **வெற்றிவேற்கை** பாடினர். அதனை இப்புத்தகத்தின் கடைசியில் பாருங்கள். அதிவீர ராமரைப் **பிள்ளைப் பாண்டியன்** என்றும் **தமிழ் வளர்த்த தென்னவன்** என்றும் சொல்வது உண்டு.

31. படப் பழக்கம்

துஷ்டப் பையன்



32. கடிதம் படித்தல்

சென்னை,
20-11-'31.

சிரஞ்சீவி ஸ்ரீநிவாஸனுக்கு அநேக ஆசீர்வாதம். இவ்விடம் யாவரும் க்ஷேமம். அவ்விடம் எல்லோருடைய க்ஷேமத்தைப் பற்றியும் அடிக்கடி எழுது.

நீ எழுதிய கடிதம் கிடைத்தது. வருகின்ற டிஸம்பர் மாதக் கடைசியில் இங்கு ஜனவரி வேடிக்கைகள் ஆரம்பமாகும். இவ் வருஷம் வேடிக்கைகள் மிகவும் நன்றாய் இருக்கும். உனது பள்ளிக்கூட விடுமுறை ஆரம்பமானதும் நீ புறப்பட்டு வரவும்.

எப்போதும் போல் நீ நன்றாய்ப் படித்து வருகிறாய் என்று நினைக்கிறேன். இந்த வருஷம் நீ மிகவும் கவனத்துடன் படிக்கவேண்டும். இந்த வருஷப் பரீக்ஷையில் நீ தவறாமல் தேர்ச்சி பெற்றால், உனக்கு இரண்டு புதுச் சொக்காய்கள் பரிசளிப்பேன்.

வேறு விசேஷமில்லை.

இங்ஙனம்,
உன். அன்புள்ள மாமன்,
வி. கே. நடராஜன்.

அதிவீரராம பாண்டியர் இயற்றிய

நறுந்தொகை என்ற

வெற்றி வேற்கை

ஆசான்

எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.

அழகு

கல்விக் கழகு கசடற மொழிதல்.
செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்.
மன்னர்க்கழகு செங்கோன் முறைமை.
வணிகர்க் கழகு வளர்பொரு ளீட்டல்.

உழவர்க் கழகுஏர் உழுதுண் விரும்பல்.
மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
தந்திரிக் கழகு தறுக ணாண்மை.
உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
பெண்டிர்க் கழகுஎதிர் பேசா திருத்தல்.
அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

பெருமை சிறுமை

தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்,
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
தெள்ளிய ஆலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும், அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர்.

சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர்.
கற்றோர் எல்லாம் அறிஞரும் அல்லர்.
பெருமையும் சிறுமையும் தான்தர வருமே.

நட்பு

அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது.
சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
அரைக்கினும் சந்தனம் தன்மணம் அறாது.
புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழாது.
கலக்கினும் தண்கடல் சேறாகாது.
அடினும் பால் பெய்துகைப் பறாது பேய்ச் சுரைக்காய்.
ஊட்டினும் பல்விரை உள்ளி கமழாது.

ஆதலால்

ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே.
நூறுண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசி போல் வேர்க்கொள் ளாதே.

பிழை பொருத்தல்

சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியோ ராயின் பொறுப்பது கடனே.
சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே.

கல்வி மாண்பு

கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதரா கும்மே
நாற்பால் குலத்தில் மேற்பால் ஒருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.
எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியிற் கற்றோரை வருக என்பர்
அறிவிடை ஒருவனை அரசனும் விரும்பும்.

ஆகையால்,

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

எவர்க்கு எது இல்லை

யானைக் கில்லை தானமும் தருமமும்.
பூனைக் கில்லை தவமும் தயையும்.
ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும்.
சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும்.
முதலைக் கில்லை நீத்தும் நிலையும்.
நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.
கேளும் கிளையும் கெட்டோர்க் கில்லை.
அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.
அல்லல் இல்லை அறிவுடை யோர்க்கே.

நிலையாமை.

உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா.

(1) செல்வ நிலையாமை.

குடைநிழ லிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்
சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினும் அடைவர்.
குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்.
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.
எழுநிலை மாடம் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பாழ் ஆயினும் ஆகும்.

(2) வறுமை நிலையாமை.

பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினும் ஆகும்.
அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.

(3) யாக்கை நிலையாமை.

மணவணி அணிந்த மகளிர் ஆங்கே
பிணவணி அணிந்துதம் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

ஆதலால்,

இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே
இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

அச்சம்

தறுகண் யானை தான் பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.
குன்றுடை நெடுங்கா டூடே வாழினும்
புன் தலைப் புல்வாய் புலிக்கஞ் சும்மே.
ஆரையாம் பள்ளத் தூடே வாழினும்
தேரை பாம்பிற்கு மிகவஞ்சுமே.
குஞ்சரந் தன்னைக் கோடழிக்கும் பாம்பு
பைம்பொறி மஞ்ஞைக் கிரையா கும்மே.

இதனில் இது நன்று

கொடுங்கோல் மன்னர் வாழும் நாட்டின்
கடும்புலி வாழும் காடு நன்றே.
சான்றோ ரில்லாத் தொல்பதி இருத்தலின்
தேன்தேர் குறவர் தேயம் நன்றே.

பதர்

காலையும் மாலையும் நான்மறை யோதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே.
அங்கண்மா ஞாலத் தரசுவீற் றிருந்து
வெங்கலி கடியா வேந்தனும் பதரே.
முதலுள பண்டம் கொண்டுவா ணிபஞ் செய் (து)
அதன் பயன் உண்ணு வணிகரும் பதரே.
வித்தும் ஏரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

பொய்யும் மெய்யும்

பொய்யுடை யொருவன் சொல்வன் மையினல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.
மெய்யுடை யொருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

ஒழிக்க வேண்டுவது

பழியா வருவது மொழியா தொழிவது-
சுழியா வருபுனல் இழியா தொழிவது.

போக்கு வரவு.

துணையோ டல்லது நெடுவழி போகேல்.
புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.
வழியே ஏகுக வழியே மீளுக.

34. தமிழ் மொழி வாழ்த்து

தான தனத்தன தான தனத்தன
தான தந்தானே.

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழிய வே.

2. வான மளந்த தனைத்து மளந்திடும்
வண் மொழி வாழிய வே.

3. ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
யிசை கொண்டு வாழிய வே

4. எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழிய வே.

5. சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையக மே

6. தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே.

7. வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே.

8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே.

சி. சுப்பிரமணிய பாரதியார்

Reprint - August 1945—(1500)

Haddon & Co., 49, Badrian Street, Madras.

நவக் கிரஹங்கள்

1. சூரியன் 4. புதன் 7. சனி
2. சந்திரன் 5. வியாழன் 8. ராகு
3 செவ்வாய் 6. சுக்கிரன் (வெள்ளி) 9. கேது

இந்து சாஸ்திரங்களின்படி கிரஹங்கள் ஒன்பது. இவைகளில் ராகு, கேது என்பவை உண்மையில் கிரஹங்கள் அல்ல. ஆனல் அவை சூரிய வட்டமும் சந்திர வட்டமும் சந்திக்கும் இரண்டு ஸ்தானங்களிலும் ஏற்படும் சாயா உருவங்கள். ஆகையால் இவைகளைச் சாயாக் கிரஹங்கள் என்று சொல்லுகிறார்கள்.

தற்கால வான சாஸ்திரங்களின்படி சூரிய மண்டலத்தில் உள்ள கிரஹங்களில் (Planets) சூரியன் (Sun) எல்லாக் கிரஹங்களுக்கும் நடுவில் இருக்கின்றது. மற்ற எல்லாக்கிரஹங்களும் சூரியனைச் சுற்றியே இருக்கின்றன. சூரியனுக்கு அருகில் உள்ள கிரஹம் புதன் (Mercury). அதனையடுத்து வெள்ளி (சுக்கிரன்-Venus) இருக்கிறது. அதன் பின் பூமி (Earth) யும் அதைச் சுற்றிவரும் சந்திர (Moon) னும் இருக்கின்றன. அடுத்தது செவ்வாய் (Mars) என்னும் கிரஹம். இதற்குப் பின் தான் உபக்கிரஹங்கள் இருக்கின்றன. இதற்குப் பின் வியாழன் (Jupiter), சனி (Saturn) யூரானஸ்(Uranus), நெப்தியூன்(Neptune) என்னும் கிரஹங்கள் முறையே இருக்கின்றன.

இக்கிரஹங்களெல்லாம் தமது சொந்தத் தண்டிலே (Axis) சுழன்று கொண்டே, குறிப்பிட்ட காலத்தில் சூரியனைச் சுற்றிவருகின்றன. இவைகளில் சந்திரன் மாத்திரம், தான் சுழல்வதோடு, பூமியைச் சுற்றிக்கொண்டே சூரியனையும் சுற்றி வருகிறது. இக் கிரஹங்கள் சூரியனை ஒரு ஒழுங்கில் சுற்றி வருகின்றன.

கிரஹங்கள்—Planets

1. சூரியன்—Sun	5 செவ்வாய்—Mars
2. புதன்—Mercury	6. வியாழன்—Jupiter
3. வெள்ளி—Venus	7. சனி—Saturn
4. பூமி—Earth	8. யூரானஸ்—Uranus
சந்திரன்—Moon	9. நெப்தியூன்—Neptune

V. S. Swaminathan, publisher, Madras, Madura & Tinnevelly